Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை


Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை



# பாட்டிலே பாரதி

கலைமணி
கொத்தமங்கலம் சுப்பு

பாட்டிலே பாரதி ■ கலைமணி கொத்தமங்கலம் சுப்பு

# அணிந்துரை

## புலவர் இரா. இராமமூர்த்தி

மகாகவி பாரதியார் தமிழ் இலக்கணப் புலமையும் பழந்தமிழ் இலக்கிய அறிவும் நிரம்பியவர். மன்னர்தம் அவையிலும், புலவர்களின் குழுவிலும் தம் தமிழறிவைப் புலப்படுத்துவதை விட, தமிழைப் பாமர மக்களிடம் அறிமுகப்படுத்தி அவர்களை உயர்த்து வதையே தம் கடமையாகக் கருதியவர். அதனால்தான் தம் பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில்:

''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத் திலே செய்து தருவோன் தமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகிறான். ஓரிரண்டு வருஷ நூற் பழக்கமுள்ள தமிழ்மக்கள் எல்லாருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தல் வேண்டும்'' என்கிறார்.

பாரதியார் பாடல்களில் காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, அக்கால மேடைப் பாடல்களின் வர்ணமெட்டு, கிளிக் கண்ணி ஆகிய பாமர மெட்டுக்கள் அமைந்துள்ளன.

*'பாட்டிலே பாரதி'* என்ற இந்த நூல் மகாகவி பாரதியார் விருப்பப்படியே எளிய பதங்கள், எளிய நடை, சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டுக்களுடன் வில்லுப்பாட்டு என்ற பாமர இலக்கியமாகவே விளங்கு கிறது. இந்த நூல் நம் தாய்மொழிக்குப் புத்துயிரும் தருகிறது.

''மானுடப் பெண்கள் ஊனுருகப் பாடுவதையும், ஏற்றநீர்ப் பாட்டின் இசையையும், நெல்லிடிக்கும் பெண்கள் குக்குவெனக் கொஞ்சும் ஒலியையும், அண்ணம் இடிப்பாரின் சுவைமிகுந்த பண்களையும், பண்ணை மடவார் பழகுபல பாட்டினையும், வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் கொட்டி இசைக்கும் கூட்ட முதப் பாட்டையும் நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நின்றொலிக்கும் பாட்டினையும்'' பாரதியாரைப் போலவே கூர்ந்து கவனித்திருக்கிறார் நம் கொத்தமங்கலக் கவிஞர்.

உழவர் பாடும் பள்ளுப் பாட்டு, ஏற்றப் பாட்டு, பெண்களின் கும்மி, கோலாட்டப் பாட்டு, காவடிப் பாட்டு ஆகிய மெட்டு வகையைத் தொகுத்து மேடையில் ஏறிப்பாடும் வகையில் அமைந்ததே வில்லுப்பாட்டாகும்.

தமிழகத்தின் வடமாவட்டங்களில் கூத்துப் பாடல்களும், தென் மாவட்டங்களில் வில்லுப் பாட்டும் ஆண்டு முழுவதும் ஊர்தோறும் உழைத்த மக்களைக் களைப்பைப் போக்கவும் களித்து மகிழவும் மேடையேற்றப்பட்டன.

''தந்தனத்தோம் என்று பாடியே வில்லினில் பாட'' என்று வில்லிசைக்கும் பாவலர் பாட, ''ஆமா! வில்லினில் பாட'' என்று தாளக் கருவி இசைப்போர் பின்பாட்டுப் பாட, ''வந்தருளும் கலைமகளே!'' என்று அனைவரும் பாடும்போது கலைமகளே அந்த மேடையில் வந்துவிட்ட காட்சி நம் மனக்கண்ணில் தெரியும். எதிரில் அமர்ந்துள்ளவர்கள் எழுந்து துள்ளி, கைகொட்டிப் பாடும் வகையில் அனைவரையும் வசப்படுத்தும் வில்லுப்பாட்டில் தனிச்சாதனை புரிந்தவர் 'கலைமணி' கொத்தமங்கலம் சுப்பு ஆவார்.

கடந்த அறுபதாண்டுக்காலத்தில் சாத்தூர் பிச்சைக்குட்டிப் பாவலர், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோர் தமிழகமெங்கும் மேடைகளில் பாடி, வளர்த்த கிராமியக் கலை வில்லுப் பாட்டாகும். இக்காலத்தில் கவிஞர் 'கலைமாமணி' சுப்பு ஆறுமுகம், இக்கலையில் தலைசிறந்து விளங்குகிறார். கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் அருமை மைந்தர்



விசுவநாதன் பி.ஏ.,பி.எல்., அவர்கள் தம் தந்தையின் வழியில் வில்லிசைப் பாடல் இசைத்து வருகிறார்.

எளிய மக்களிடையே நாட்டுப் பற்றைத் தட்டி எழுப்பித் தலைவர்களின் தியாகத்தை உணர்த்திய கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் 'காந்தி மகான் கதை' பெரும் புகழ் பெற்ற கிராமிய இலக்கியமாகத் திகழ்ந்தது.

கொத்தமங்கலம் அவர்களின் 'பாட்டிலே பாரதி' என்ற மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை உளமுருக உரைக்கும் வில்லுப் பாட்டும் பெரும்புகழ் பெற்றது. அந்த நூல் மீண்டும் இப்போது பதிப்பிக்கப் பெறுகிறது.

''பாரதியின் பாட்டைக் கொஞ்சம் படிச்சுப் பாரடி

பாடினவாய் தேனூறும் குடிச்சுப் பாரடி''

என்று இந்நூல் தொடங்கும்போதே பெண்களைக் கவரும் பெருமை பெறுகின்றது. பாரதிக்குப் பெண்கள் மீதும், பெண்களுக்கு பாரதி மீதும் தனி ஈர்ப்பும் மதிப்பும் இருப்பது உண்மைதானே?

முதல் பாட்டிலேயே 'கலைமணி' அவர்கள் பாரதியாரின் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், வசன கவிதை ஆகியவற்றை அறிமுகப்படுத்துகிறார்.

''படிக்கல்லைத் தராசிலே போட்டுப் பாரடி

பாட்டெல்லாம் தோத்துப் போகும் வசனம் பாரடி''

என்ற வரிகளை நாமும் பாடும்போது பாரதியாரும், கவிஞர் கொத்தமங்கலம் சுப்புவும் சம எடையில் துலங்குவதை நம் இதயத் தராசில் உணர்கிறோம். மகாகவி பாரதியின் பாட்டை, வில்லிசையில் பாடிப் பரப்பும் வாய்ப்பை,

''தேடக் கிடைக்காத மாணிக்கமாய் வந்து
செந்தமிழ் சொன்னவனை
பாடக் கிடைத்தது பாக்கியம்தான் எங்கள்
பரம்பரைப் புண்ணியமே''

என்று வில்லிசை வள்ளல் போற்றுகிறார்.

அஞ்சி அஞ்சிச் சாகும் நாட்டு மக்கள் நிலையை,

''ஒத்தைக் குதிரையைக் கண்டுவிட்டால்
ஓடி ஒளிவார் பள்ளத்திலே
பத்துக் குதிரையைக் கண்டுவிட்டால்
பக்கத்து ஊருக்கு ஓடிடுவார்!''

என்று அவர் பாடுவதைக் கேட்டால் எதிரில் உள்ளவர் விழுந்து விழுந்து சிரிப்பதைக் காணலாம். கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் எளிய, இனிய வில்லுப் பாட்டு மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பொதுமக்களிடையே பரப்பும் மகத்தான பணியைச் செய்து விடுகிறது. இந்த வில்லுப் பாட்டைப் படிப்பவர், நேரில் கேட்பவர் அனைவருக்கும் தேச பக்தி மேலோங்கும் என்பது முக்காலும் உண்மை.

பாரதியார் பிறந்த நெல்லை மாவட்டத்தைக் கவிஞர் பாடும்போது தமிழ் இலக்கிய வரலாற்றையே தொகுத்துக் கூறுகிறார்.

நெல்லை மாவட்டத்திலும், எட்டையாபுரத்திலும் தோன்றிய மாமேதைகளை வில்லுப்பாட்டின் வழியே மக்கள் இதயத்தில் நடமாட வைக்கும் சிறப்பு, எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் திறன் பெற்ற குமரகுருபரர், வடதிசை சென்று சிங்கத்தின் மேலேறிக் கம்ப ராமாயணச் சொற்பொழிவாற்றியதே, துளசி ராமாயணம் தோன்றக் காரணம் என்ற வரலாற்று உண் மையை இந்த வில்லுப்பாட்டு உறுதிப் படுத்துகிறது.

சீவலப்பேரி கடுவாய் சுப்பையரின் பெயரனாகவும் எட்டையா புரம் சின்னசாமி அய்யரின் மகனாகவும் பாரதி தோன்றிய வரலாற்றைக் கூறும்போதே தம் பெயரும் சுப்பிரமணியன் என்பதையும், பாரதியைப் போலவே தாமும் சிற்றன்னையின் வளர்ப்பில் வளர்ந்ததையும் இந்த நூலில் விளக்குவது நமக்கு வியப்பைத் தருகிறது.

திருவல்லிக்கேணி யானையின் காலடியில் அகப்பட்ட தையும், எங்கிருந்தோ வந்த குவளைக்கண்ணன் காப் பாற்றியதையும், யானையின் மீது அன்பு காட்டியபடியே பாரதி மறைந்ததையும் வில்லுப்பாட்டின் வழியே



கேட்பவர் கண்களில் கண்ணீர் வழிவதை நாமும் காண்கிறோம்.

காசியில் பாரதியை வெறுத்த அத்தை கணவர், அவர் பாடியதைக் கேட்டு மனம் மாறிய நிகழ்ச்சி நம்மை உணர்ச்சிவசப்பட வைக்கும்.

பாரதி தம் விருப்பம்போல் கவிதை பாடுவதையே விரும்பினார் என்பதை,

''இன்னொருவர் மனம் போல் கவிதை
இசைத்துக் கவிபாடி
தன்னையும் தன்னுடைய இனிய
தமிழையும் விடுவோரோ?''

என்ற பகுதியிலும்,

''புதுச்சேரி செல்ல அவர் சைதாப்பேட்டையில் ரயில் ஏறினார்'' என்பதையும்,

காரைக்குடி கொப்புடையம்மன் கோயிலில் மகாகவி பாரதியார் பாடியதை நேரில் தரிசித்து கேட்டு, மகிழ்ந்த இனிய அனுபவத்தையும், பட்டியிடும் இந்த வில்லுப் பாட்டு பாரதி வரலாற்று ஆவணமாகவே விளங்குகிறது.

''சொல்லும் செயலும் ஒன்றாய் வந்த
சுதந்தரக் கவிஞரையே
அல்லு பகலும் வாழ்த்தி வணங்கி
அடியைப் போற்றுகிறோம்''

என்று பாடும் 'கலைமணி' கொத்தமங்கலம் சுப்பு அவர் களின் பாடலடியையும் நாம் போற்றுவோம்.

அன்பன்

**இரா. இராமமூர்த்தி**





# முன்னுரை

வணக்கம்.

எத்தனையோ நாள்களாக என் மனத்தில் இருந்த ஓர் ஆசை இன்று நிறைவேறுகின்றது. உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் வரலாற்றை நாட்டுப் பாடல் வடிவில் தன்னுடைய நாட்டுப் பாடல் இசை நிகழ்ச்சிக்காக எழுதி அதை கவிஞர் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் பாரதி மணி மண்டபத்தில் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் முன்னிலையில் பல வருடங்களுக்கு முன் என் தந்தையார் அமரர் சுப்பு அவர்கள் அரங்கேற்றினார்.

இதுகாறும் அந்த நூல் அச்சில் வரவில்லையே என்ற ஏக்கத்தை திரு. செ.மே. பழனியப்ப செட்டியார் நிறைவேற்றினார். பல ஆண்டுகள் அந்தப் பிரதிகள் கிடைக்காமலிருந்து, அந்த நூல் மகாகவியின் 128ஆவது பிறந்த நாளில் நிறைவேறுகிறது.

கலைமாமணி விக்கிரமன் அவர்களின் முயற்சியால் ஸ்ரீராம் நிறுவனங்களுக்காக ஸ்ரீராம் பாரதி கலைக் கழகத்தார் பாரதி விழாவில், இதை வெளியிடுகிறார்கள். ஸ்ரீராம் குழுமத் தலைவருக்கும், இந்த நூலை வெளியிட வாய்ப்பளித்த திரு. ஜி. சுந்தரேசனுக்கும் நன்றித் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சொல்லுவது எல்லாருக்கும் மிக எளிது. சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம் என்பது அறிஞர்கள் கூற்று. ஆனால், பாரதியார் அவர்கள் வாழ்க்கையில் சொல்லும் செயலும் இணைந்திருந்தன என்பது என் தந்தையார் அவர்களின் முடிவான கருத்து. அந்தக் கருத்தை நெஞ்சில் கொண்டு கதைப் போக்கை கொண்டு சென்றிருக்கிறார்கள்.

மேலும், சாதாரணமாக கவிதை நூலில் இடையே வசன நடையைச் சேர்ப்பது வழக்கமில்லை. இருந்தாலும் கதை நிகழ்ச்சி நடத்தும் பொழுது இடையிடையே அவர் கூறிய சில வசனப் பகுதிகளும் சேர்த்தளிக்கப்பட்டிருக்கிறது. இது, வில்லுப்பாட்டாக தந்தையின் பாணியில் அடியேனும் அரங்கேற்றுகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கொத்தமங்கலம் விசு**

# பதிப்புரை

ஸ்ரீராம் பாரதி இலக்கியக் கழகம் - ஸ்ரீராம் குழுமத்தினர் (இலக்கியப் பிரிவு) சென்ற இருபத்து ஓராண்டுகளாக பாரதி இலக்கியத்தைப் பரப்பும் முயற்சியில் எளிய முறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

மகாகவி பாரதி பிறந்த நாளைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழ்நாட்டு மாணவ, மாணவியர் பாரதி இலக்கியத்தை அறியும் வகையில் இலக்கியங்களில் மேலும் ஈடுபாடு கொள்ளச் செய்ய தமிழகமெங்கும் பேச்சுப் போட்டிகள் நடத்தி வருகிறார்கள். அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் கணிசமான தொகையை ரொக்கப் பரிசாக வழங்கி வருகிறார்கள்.

பாரதி இலக்கியச் சிறப்பைப் பேச்சால், எழுத்தால், தொண்டால் எனப் பலவகையில் பரப்பி வரும் அறிஞர்கள் பலருக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டி வருகிறார்கள்.

பாரதி விழாவின் நிறைவில் விழாவுக்கு வருகை புரிந்தவர்களுக்கு பாரதி இலக்கிய நயங்கூறும் நூல் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டு 'கலைமணி' கொத்தமங்கலம் சுப்பு எழுதிய 'பாட்டில் பாரதி' என்ற நூலை பாரதி அன்பர்களுக்குக் காணிக்கையாக்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறார்கள்.

இந்நூலிலேயே கொத்தமங்கலம் சுப்பு எழுதிய 'கம்ப ராமாயணச் சிந்து'வும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நூலைப் பதிப்பிக்க உதவிய சுப்புவின் மைந்தர் கொத்தமங்கலம் திரு. விசு அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும், நூலுக்கு அணிந்துரை வழங்கிய புலவர் இரா. இராமமூர்த்தி அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்த நூல் பாரதி இலக்கிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவும் என நம்புகிறோம்.

**ஜி.சுந்தரேசன்**
ஸ்ரீராம் நிறுவனங்களுக்காக
(ஸ்ரீராம் பாரதி இலக்கியக் கலைக் கழகத் தலைவர்)



# பாட்டிலே பாரதி

## கொத்தமங்கலம் சுப்பு

## பாரதியார் பாட்டை கொஞ்சம் படிச்சுப் பாரடி!

பாரதியார் பாட்டைக் கொஞ்சம் படிச்சுப் பாரடி
பாடினவாய் தேனூறும் குடிச்சுப் பாரடி! (பாரதியார்)

காட்டுக்குயில் பாட்டைக் கேட்டுக்
காளைமாடு மயங்குதடி!
வேட்டைக்காக வந்த வேடன்
வில்லைப் போட்டு உருகுறாண்டி! (பாரதியார்)

கண்ணன் பாட்டு இனிக்குதடி கற்கண்டு போலே
கடிச்ச வாயும் மணக்குதடி கற்பூரம் போலே
வெண்ணெய் திருடும் மாயம் பிரான்
வேலைக் காரனாக வந்து
என்னென்னமோ செய்யுறாண்டி
எனக்குச் சொல்லத் தெரியுதில்லே (பாரதியார்)

காதலுன்னா காதல் - அந்தக்
கந்தன் வள்ளி காதல் - கீத்துக்
காவணத்துக் கயிறு ரெண்டு
கட்டித் தழுவும் காதல்!
காலமெல்லாம் படிக்கலாண்டி
கந்தன் வள்ளி காதலை!
கயிறு ரெண்டும் கொஞ்சுதடி
காத்தடிக்கிற போதிலே! (பாரதியார்)

பத்தினியாள் பாஞ்சாலி சபதமே - படிச்சா
முத்து முத்தாக் கண்ணீரு உதிருமே!
குத்தமில்லாக் குலக்கொடியைக் குடிகெடுக்கிற சூதாடி
பத்தினியை அடகுவச்சே படிச்சவுங்க ஆடுறாங்க
குடுக்கிறாளே புத்திமதி பொம்பளே - அங்கே
குனிஞ்சதலை நிமிரலியே ஆம்பிளை! (பாரதியார்)

பூவைப் போலே பாட்டு இருக்குது - எனக்கும்
புள்ளைப் பாக்கியம் ஆசை வருகுது
கோழியும் நாய்க்குட்டியும் குதிச்சு விளையாடுது
கூடவே பாப்பா ஒண்ணு கும்மாளம் போடுது
நாழியும் தெரியுதில்லை நாம அந்தைப் படிச்சுட்டா
நாத்தங்காலில் பாயும் தண்ணி நாடு முழுக்கப் பாயுது
(பாரதியார்)

பாரதி அறுபத்தாறைப் படிச்சுப் பாரடி
பதஞ்சலி முனிவன் சொல்லைப் படிச்சுப் பாரடி

படிக்கல்லைத் தராசிலே போட்டுப் பாரடி
பாட்டெல்லாம் தோத்துப் போகும் வசனம் பாரடி

கதைகதையா இருக்குதொரு ஆயிரம்
கடலுக்குள்ளே முத்துப் போலே ஆயிரம்

விதம் விதமாப் பாட்டும் பேச்சும் படிச்சுட்டா
வெத்திலையைப் போட்டாப்போலே இருக்குது.

நாக்குச் சிவக்குது - வாக்கு மணக்குது
நோக்கம் சிறக்குது - ஊக்கம் பிறக்குது

பாக்கு வெத்திலை பழம்படைச்சு பாரதியைக் கும்பிடு
பாட்டுப் படிச்சு நாட்டு வண்டியை ஓட்டுறவரை கும்பிடு.



# 1. முன்னுரை

ஏட்டுச் சுவடிக்குள் பூட்டிக் கிடந்திட்ட
இன்பத் தமிழ்தனையே
பாட்டுக்கும் கூத்துக்கும் பாதை வகுத்திட்ட
பாரதியைப் போற்றி.

கல்லும் கடப்பாறை கொல்லன் உலைபோலக்
கன்னித் தமிழ்பாடச்
சொல்லும் வழக்கப் புலவரை விட்டந்தச்
சோதியை மீட்டுவைத்து,
அல்லும் பகலும் தமிழைப் படித்தாலும்
அயர்வு வாராமல்
நல்ல தமிழுக்குப் பாதை வகுத்திட்ட
நாயகன் தான்போற்றி.

பாடச்சொன்னால் காதம் ஓடிப்போகும்கெட்ட
பயத்தைப் போக்கிவைத்து
ஆடலும் பாடலும் சூழத் தமிழ்நாட்டை
ஆக்கி வைத்த பெருமான்.
தேடக் கிடையாத மாணிக்க மாய்வந்து
செந்தமிழ் சொன்னவனைப்
பாடக் கிடைத்தது பாக்கியம் தானெங்கள்
பரம்பரைப் புண்ணியமே.

தேச விடுதலைப் பாட்டில் உதிர்ந்திடும்
தூசியும் ஆவேனோ?
பாசம் விலக்கிடும் ஞான ரதத்தைப்
படிக்க அறிவேனோ?

மாசில்லாக் காதல் குயிலிசைப் பாட்டுக்கு
மாகாணி யாவேனோ? - ஏதோ
ஈசனருள்கொண்டு பாட வருகின்றேன்
என்னைப் பொறுப்பீரே.

பாரதியென்ற கடலுக்குள் ளேசிறு
படகைப் போலேநான்
சாரதி யில்லாமல் ஓடும் குதிரைபோல்
தாவும் மனம்உடையேன்
பாரதி யென்றதோர் சோலைக்குள்ளேதிரி
பச்சைக் கிளிபோலே
பாட்டுக்கும் பேச்சுக்கும் ஆசைப் பட்டுக்கிளி
பாஷையில் பாடுகின்றேன்.

பாமாலை சொன்ன கவிஞனுக்குச்சிறு
பூமாலை போடுகின்றேன்
பாமாலை சொன்ன கவிஞனுக் கென்பாட்டை
பாதத்தில் சூடுகின்றேன்.

தேமதுரத்தமிழ் செப்பிய மன்னரைச்
சின்னத்தமிழாலே
செல்லப்பிள்ளைக்கவி சொல்லி வணங்கியென்
தெய்வத்தைப் போற்றுகின்றேன்.

## 2. சூழ்நிலை

கன்னித் தமிழ்மொழி பண்ணிய புண்ணியம்
காவியம் செய்ததவம்
கம்பன் இளங்கோவும் வள்ளுவ னும்வந்து
கவிபொழி யும் நாட்டில்
அந்நியர் ஆட்சியும் ஆங்கிலக் கவியும்
அடிமைப் புத்தியுமே



பின்னிக் கிடந்த பிராயத்தி லேதமிழ்
பேச வெட்கும்நாளில்

ஆங்கில மொன்றையே தெய்வம் எனஎண்ணி
ஆயிரம் ஆயிரமாய்ப்
பாங்கின்றிக் காசைச் செலவுசெய்தே ஏழைப்
பட்டமும் பெற்றார்கள்
மூங்கிலைப் போன்று கிளைவிடும் தமிழை
முள்ளென எண்ணிக்கொண்டு
தாங்கி வளர்த்தனர் ஆங்கிலம் தன்னை
தாய்மொழி தன்னைத்தான் மறந்து.

பைரனும் ஷெல்லியும் மில்டனும் போல்தமிழ்
பாடுதற் காட்களில்லை
பாட்டும் கவிதையும் தமிழில் கிடையாது
பாஷையும் மட்டமென்றே
கைவிட்டுத் தமிழையும் செந்தமிழ பாடிய
கவிஞர் மரபையுமே
கண்டமட்டும் திட்டி கண்மூடித் தனமாகக்
காலங் கழித்துவந்தார்.

தண்ணிகொண்டா என்று சொல்லவந்தே அதில்
தமிழுடன் இங்கிலீஷை
தவிடும் புண்ணாக்கும் போலக் கலந்து அது
தனக்கும் புரியாமல்
எண்ணிஎண்ணிப் பார்த்து இங்கிலீஷிலே அதை
எனக்கு பிரிங்வாட்டர்
என்றுரைப் பார்தண்ணி கொண்டுவரு முன்னே
தாகம் தணிந்துவிடும்.

(வேறு)

தன்னை மறந்து இருந்தார்கள்
தமிழை மறந்து போனார்கள்
பொன்னை மட்டும் மறக்கவில்லை
புத்தியைக் கூட மறந்தார்கள்

தொட்டதுக் கெல்லாம் சோசியனைத்
        தூத்திப் பிடித்துக் கேட்பார்கள்
கெட்ட பகைவத் தேடுவதில்லை
        கெணத்தில் இரும்பைப் போடுவார்கள்.

காய்ச்சல் அடித்தால் வைத்தியனைக்
        கண்டு மருந்து கேளார்கள்
பேச்சி யம்மன் கோயிலுக்குப்
        பெரிய பள்ளயம் போடுவார்கள்.

ஒத்தை தலைவலி வந்துவிட்டால்
        ஊமையன் கோளாறு என்பார்கள்
பத்து அரைச்சுத் தடவார்கள்
        பதினெட்டுப் பேயைக் கும்பிடுவார்.

பட்டுச்சட்டைக்காரன் பொய்யைச் சொன்னால்
        தட்டிப்பேச யாரும் துணியார்கள்
துட்டுப்பெருத்தவன் பொய்யைச் சொன்னால்
        துரைகள் வார்த்தை என்பார்கள்

காக்கிச் சட்டையைக் கண்டுவிட்டால்
        காதத்துக் கோடியே போவார்கள்
ஆக்கினைகளுக் கஞ்சுவதில்
        ஆடும் மாடும் தோக்குமிங்கே

இந்திரன் ஆட்சிக்கும் மேலாக
        இங்கிலீஷ் ஆட்சியைப் புகழ்வார்கள்
சந்திர சூரியன் என்பார்கள்
        சட்டைக் காரர்களைப் புகழ்வார்கள்.

வீரம் வாழ்வில் வேண்டுமென்றால்
        விலைஎன்ன வென்று கேட்பார்கள்
வீரம் பூரம் பாஷாணம்
        வீட்டுக்குதவாது என்பார்கள்.

தந்தி மரங்களைப் பார்த்துவிட்டுச்
        சலாம் பண்ணியே கும்பிடுவார்



விந்தை இதுபோல் கண்டதில்லை
        வெள்ளைக்காரன் சூழ்ச்சி என்பார்கள்

தண்டவாளத்திலே வண்டி வந்தால்
        தரையில் விழுந்து கும்பிடுவார்
கண்ட மட்டுக்கும் புகழ்வார்கள்
        கம்பெனிக்காரனைத் தொழுவார்கள்.

ஒத்தைக் குதிரையைக் கண்டுவிட்டால்
        ஓடி ஒளிவார் பள்ளத்திலே
பத்துக் குதிரையைக் கண்டுவிட்டால்
        பக்கத்து ஊருக்கு ஓடிடுவார்.

கர்ணம் மணியத்தைக் கண்டுவிட்டால்
        கையை எடுத்துக் கும்பிடுவார்.
இன்ஸ்பெக்டரைக் கண்டுவிட்டால்
        எழுந்தி ரிச்சுக் கும்பிடுவார்.

தாசில் தாரைக் கண்டுவிட்டால்
        தரையில் விழுந்து கும்பிடுவார்.
டபேதாரைக் கண்டுவிட்டால்
        கடாய் வெட்டிச் சோறிடுவார்.

ஜமாபந்திக்கு முன்னாலே
        தாலியை வித்துக் கொடுப்பார்கள்.
தங்க நகையைக் கொடுப்பார்கள்
        சாமி காசைக் கொடுப்பார்கள்.

கம்பன் பிறந்த தமிழ்நாடு
        கல்விக்குத் திண்டாடும் நாளையிலே
வள்ளுவர் வந்த தமிழ்நாடு
        வாழ்வுக்குத் திண்டாடும் வேளையிலே

வள்ளல் பிறந்த தமிழ்நாடு
        வருத்துச் சோத்துக்கும் இல்லாமல்
கள்ளமும் பொய்களும் செய்வாரின்
        காலுக்குக் கும்பிடு போடையிலே.

வீரம் செறிந்த தமிழ்நாடு
வெள்ளையன் தன்னை பணிந்கக்கிட்டு
சூரம் செறிந்த தமிழ்நாடு
துடை நடுங்கின காலத்திலே.

## 3. நாட்டு வளம்

**செந்தமிழ்த்** தெய்வம் விளையாடும்
செம்பகச் சோலையே குத்தாலம்
**அருவி**யில் நின்று குளிந்தவர்க்கு
அறிவுச் சுடர்விடும் குத்தாலம்

**தென்றல்** பிறக்கும் மலையிதுவே
செந்தமிழ் வாழும் மலையிதுவே
குன்றில் பொருந்தும் குலவிளக்காய்க்
கூடி வருந்தமிழ்க் குத்தாலம்.

**காவிரி** யாற்றை நமக்கருளி
கஞ்சிக்கு நெல்லைக் கொடுத்தழுனி
**கல்வி**யைத் தந்த அகத்தியனார்
கன்னித் தமிழ்ப் பொதிகை அதுவே

**சகலகலாவல்லி** மாலைசெய்த
சாமி பிறந்தது அந்நாடு
**சரியாசனம்** பெத்து தமிழ்பாடும்
சாது பிறந்தது அந்நாடு

**கங்கைக்** கரையில் தமிழ்மணக்கக்
கம்பன் கவிதையைப் பிரசங்கம்பண்ணி
இந்தியில் அர்த்தம் எடுத்துச்சொல்ல
இத்தைக் கேட்ட ஒருஞானி



இந்தியில் ராம கதையைச்செய்தார்
எங்கும் பரவுது ராமகதை
தூய வடமொழிக் காவியமாம்
துளசி தாசனின் ராமகதை

தில்லையி லாடும் சிவபெருமான்
செந்தமிழ் பாடவே ஆசைகொண்டு
தி.க.சிதம்பர நாதனென்றே
திருநெல் வேலி தனில்பிறந்து

எல்லையில் லாத தமிழ்க்கவிதை
இன்பமுடன் கம்ப ராமாயணம்
சொல்லிச்சொல்லி நம்மை ஊக்குவித்த
நெல்லைப் பதியுண்டு அந்நாட்டில்

ஆயகலை என்ற வாக்குரைத்த
அந்தக் குருபரன் சொன்னதன்றோ
ஊமைக் குழந்தை தமிழ்பாடி
உலகு புகழ்ந்திடும் அந்நாடு

பூத மிருக்கவும் பேய்வசிக்க
பொந்துலே பாம்புகள் வாசம்பண்ண,
காத வழிக்குநான் போனாலும்
கண்ணுலே வந்து கொசுகுமொய்க்க,

புளியம் விறகிலே பொங்கித்தின்னால்
பொன்னான உடம்பு கருத்துவிடும்
புளிய மிலாறுகள் திருடனுக்குப்
பூசை கொடுக்க உபயோகம்.

அந்தப் புளிய மரத்திலுக்கே
அடிச்சது யோகம் அந்நாட்டில்
பொந்துப் புளிய மரத்தைச்சுத்திப்
பொன்னாலே பூணும் புடித்து வைத்து

கும்பிட்டு வாழக் கொடுத்து வைத்த
கோடானுக் கோடிப் பெயர் வருவார்

கம்பன் கவியை உவக்குமுன்னே
    கடவுள் கேட்டார் சீரங்கத்தில்

நம்சட கோபனைப் பாடலிலே
    நாமிந்தப் பாடலைக் கேட்பதுண்டோ?
முதலில் சடகோபன் பாட்டுரைத்து
    முத்துப்போல் காவியம் சொல்லுஎன்று

அந்தச் சடகோபர் அவதரித்த
    அழகுத் திருப்புளி உண்டுஅங்கே
ஆழ்வார் திருநகர் பக்கத்திலே
    ஆட்டிடையர்கவி பாடுவராம்

சீனியும் பாலும் கலந்தாற்போல்
    சிந்து படித்த மகராசன்
சென்னி குளத்து அண்ணாமலையான்
    சிறக்க வாழ்ந்ததும் அந்நாடு.

இந்தப் படிக்குத் தமிழ்மணமே
    எங்கும் மணக்கும்அச் சீமையிலே
வந்து உதிக்கும் தமிழ்ப்பாடல்
    வாயைத் திறந்து பேசுமுன்னே

தாமிர பருணித் தண்ணியிலே
    தங்கம் இருக்குது என்பார்கள்
தங்கத் திற்கும் மேலான
    தமிழி ருக்குது நாமறிவோம்.

## 4. தாய் - தந்தை

அந்தத் திருநெல்லைச் சீமையிலே
அழகாய்ப் பள்ளுப் பாடியஊர்



சிவலப பேரி என்னும் ஊரில்
சிறந்த அந்தணர் கூட்டத்திலே

கடுவாய்ச் சுப்பையர் என்றொருவர்
காசுபணம் மிக்க உடையவராம்

சின்னச்சாமி அய்யர் என்றுசொல்லும்
செல்வரைப் பெத்து வளர்த்துவந்தார்

சின்னச்சாமி என்று சொன்னாலும்
சீமைக்கெல் லாம்அவர் பெரியவராம்

கன்னித் தமிழிலே வல்லவராம்
கணக்கு வழக்கு அறிந்தவராம்

பன்னு தமிழும் படித்தறிந்து
பண்டிதரென்ற பெயர் வாங்கி

எட்டப்ப மன்னன் புகழ்கேட்டு
இளசை நகருக்கு வந்தாராம்.

## 5. எட்டையாபுரம்

எட்டப்ப நாயக்கன் பட்டினத்தை
என்னென்று சொல்லிப் புகழ்ந்திடுவேன்

கட்டுத் துறையும் கவிபாடும்
கல்விக் களஞ்சியம் அந்நகரே

சங்கம் வளர்த்த மதுரையைப்போல்
சகல கலையும் வளர்த்திடுவார்

தங்கத்தை மன்னன் மதியானாம்
தமிழை என்றும் மதிப்பானாம்

எட்டப்ப நாயக்கன் பேராலே
ஏட்டுச் சுவடிபல் லாயிரமாம்

கட்டிக் கரும்புச் சுவைபோலே
காவியம் உண்டு அவன்மேலே

சீறாப் புராணத்தைச் செய்தமகான்
செம்பாகு மான உமர்ப்புலவர்

சீனியைப் போலே தமிழ்பாடும்
செவ்வாது சக்கரைக் கட்டிகளும்

நாகூர் முத்துப் புலவருமே
நாளொரு நூல்செய்த நன்னகராம்

எட்டப்ப நாயக்கன் பேரைச்சொன்னால்
ஏழ்மை விலகும் புலவர்க்கெல்லாம்

துட்டுக்குப் பஞ்சம் கிடையாது
தொடர மாட்டான் கலியனுமே

பட்டியும் தொட்டியும் குடிசையுமாய்ப்
பத்துப் பதினைஞ்சு சித்தூரை

கட்டி யாளும்சின்ன ராசனுக்குக்
காசினி யெல்லாம் கீர்த்திவரர்

செந்தமிழ்ப் பாட்டும் கீர்த்தனமும்
தெலுங்குப் பதங்களும் ஏராளம்.

சந்தச் சரபக் கவிஞர்களும்
சங்கீத வித்வானும் ஏராளம்

எங்கும் தமிழ்மணம் வீசுதடா
எட்டயா புரத்துச் சீமையிலே

பொங்கும் கலைமணம் வீசுமடா
புண்ணிய வானோட வாசலிலே.



கம்பனத் தானுட வாசலிலே
கன்னித் தமிழ்மணம் வீசுமடா

சம்பளக் காரனும் ராசாவும்
சரிக்குச் சரிதமிழ் பாடுவராம்

அந்தாகர் தேடி வந்தாராம்
அந்தணர் குலத்துச் சின்னச்சாமி.

## 6. தந்தைக்கு அரண்மனை உத்தியோகம்

ராஜ துரைகளைக் பேட்டிகண்டார்
ரத்தின மோதிரம் போட்டுக்கொண்டார்

செந்தமிழ் பாடும் புலவர்களில்
சின்னச்சாமி அய்யர் ஒன்றானார்

நாளா சரிதியில் ராஜனுக்கு
நம்பிக்கை யானவர் ஆகிவிட்டார்

சின்னச்சாமி என்ற பேரைக்கேட்டால்
சிம்ம சொப்பனம் ஊருக்கெல்லாம்

என்னத்தையோ அவர் எண்ணிக்கிட்டு
எதிரில் வந்தவரைத் திட்டுவராம்

கணக்கு வழக்கிலே சூரப்புலி
காயிதம் ஓலைகள் தேவையில்லை

மனக்கணக்கிலே சந்திரனார்
மாறி வரும்நிலை சொல்லிடுவார்.

எட்டையா புரத்தில் மாமன்மகள்
இலட்சுமி அம்மாளைக் கட்டிக்கிட்டு

லெட்சுமி அம்மாளைக் கட்டிக்கிட்டு
லெட்சப் பிரபுபோல வாழ்ந்து வந்தார்.

## 7. பாரதியார் பிறப்பு

சிப்பியில் முத்துப் பிறந்ததுபோல்
சிங்கம் ஒருகுட்டி போட்டதுபோல்

சின்னச்சாமி அய்யர் தன்மகனாய்ச்
செந்தமிழ் நாட்டுக் கவிபிறந்தார்

குப்பையில் மாணிக்கம் வந்ததுபோல்
கோடி சூரியன் உதித்ததுபோல்

இருண்டு கிடந்த தமிழ்நாட்டை
எழுப்ப வந்த ஞாயிறுபோல்

சுருண்டு கிடந்த தமிழ்மகனைச்
சொல்லினில் வீரம் வரச்செய்யவே

இலட்சுமி அம்மாள் உதரத்திலே
இந்திய நாட்டுக் கவிபிறந்தார்

எட்டையாபுரத்துச் சீமையிலே
எங்கும் புகழும் கவிபிறந்தார்

சொட்டைத் தமிழ்என்று சொன்னவர்க்கே
சூடு கொடுக்கக் கவிபிறந்தார்

தென்மொழி பாதி வடமொழியாய்த்
தெந்தினம் பாடிய காலத்திலே



தேனினைப் போலத் தமிழுபாடத
தெய்விகப் பாரதி வந்துவிட்டார்

ஆயிரத் தெண்ணூத்தி எண்பத்திரண்டில்
ஆனதோர் கார்த்திகை மூலத்திலே

மாநிரு ஞாலம் புகழ்ந்திடவே
மன்னவர் மன்னன் பிறந்துவிட்டான்.

மகாகவி பிறந்துவிட்டான்.

## 8. தமிழ்த்தெய்வம்

புள்ளிமயில் மீதுவரும் தெய்வம் - எங்கள்
உள்ளமதில் குடிகொண்ட உத்தமத் தெய்வம்

அள்ளிஅரு ளும்கருணை வள்ளல் - என்றும்
ஆறுமுக மாகஇருந் தாண்டுவரும் தெய்வம்

பன்னிருகை வேலன்முரு கேசன் - எங்கள்
பங்கிலே இருந்துதவும் பழனிமலை வாசன்

என்னிதய மாமலரில் வாசன் - எங்களை
ஏழேழு தலைமுறையாய்க் காத்துவரும் ஈசன்

சொல்லுக்கு வல்லமைகள் தந்து - நாவில்
சொல்வதை நிஜமாக்கிச் சுகமாக்கி வைத்துப்

பல்லுக்கும் நாக்குக்கும் நடுவே - நின்று
பாட்டுக்குத் துணைசெய்யும் பழனிமலை வாசன்.

ஓங்கார சக்திஅவ னாகி - இந்த
உலகெலாம் காப்பாற்றும் ஒருவனும் ஆகி

நீங்காமல் என்னுடைய நெஞ்சில் - நின்று
நினைக்குமுன் காவிபாட வைக்குமக ராஜன்

வேலுமயில் என்றுதிரு நீறை - தொட்டு
மேனியிலே பூசினால் ஞானத்தை அருளி

பாலுபொங்கி வருகிறாற் போலே - தமிழில்
பாட்டுவரச் செய்திடும் பழனிமலை வாசன்

குழந்தைகள் முகத்திலே நிற்பான் - எங்கள்
குடும்பத்தைக் கோயிலாய்க் கொண்டகுரு நாதன்

அப்பனே அய்யனே முருகா - என்னை
அருகிருந்து காக்கின்ற உன்பாதம் தஞ்சம்

செந்தில்மா நகர்மேவி நிற்கும் - அந்தச்
சிவசுப்பிர மண்யனின் பெயர்சூடு வாரை

எந்நாளும் தமிழில் பாடச் - செய்யும்
எந்தையின் பேர்தன்னை யான் சூடும் பேரைப்

பாரதிக்கும் அந்நாளில் வைத்தார் - இந்தப்
பார்புகழும் சுப்பிரமண்ய பாரதியென் றானார்

சீரதிகம் பெற்றுவரும் நாளில் - மிக்க
செல்வராய் வளர்த்தாராம் சின்னச்சாமி அய்யர்.

## 9. தாயும் தம்பிமாரும்

பெற்ற அன்னை இறந்துவிட்டாள்
உற்ற தமிழிடம் அவரைவிட்டே

சித்தன்னை வந்து வாய்த்தவளோ
பெத்தவளுக்கு மேல் பத்துப்பங்காம்



என்னை வளர்த்ததும் சித்தன்னைதான்
பொன்னை வளர்ப்பது போல்வளர்த்தான்

தன்னையும் பட்டினி போட்டுவிட்டுத்
தம்பியர்க் கன்ன மளித்து வந்தார்

சின்னஞ் சிறுதம்பி மூவரையும்
என்னையும் நன்கு வளர்த்தெடுத்த

அன்னை இவரை அடைந்தேன்யான்
முன்னைத் தவத்தின் அருளாலே

சிற்றன்னை மிகவும் நல்லவராய்ச்
செல்லக் கவியை வளர்த்துவந்தார்

மற்றொரு பிள்ளையும் பெண்ணும்அந்த
மாதாவுக்குப் பிறந்தார்கள்

மூத்தாள் பேரையே பெண்ணுக்கிட்டு,
பிள்ளைக்கு விஸ்வ நாதனென்று

ஆத்தாள் தனக்கும் மேலாக
அந்த அம்மை இருந்தார்கள்.

## 10. எழுத்தறிவித்தல் - உபநயனம்

அஞ்சு வயசிலே பாரதிக்கு
ஹரிஹரி நானா சொல்லித்தந்து
அக்ஷராப் யாசமும் செய்துவைத்தார்
அறிவே உருவாய் ஆனவர்க்கு

ஏழு வயசிலே பாரதிக்கு
எக்ஞோப வீதம் போட்டார்கள்

இன்பத் தமிழ்பாடும் பாரதிக்கு
இன்னொருத்தர் உபதேசம் செய்தார்

ஆண்டவன் தந்த நயனத்துடன்
அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டு
அந்தண னாக்கியே வைத்தார்கள்
அருமைக் கவிஞர் பாரதியை

ஓதலும் ஓது வித்தலுமே
உத்தம மாகிய தர்மமென்றே
வேதியர் யாவரும் இன்றிருந்தால்
விந்தை மிகுந்திடும் நாட்டினிலே

ஆதலின் சுப்பையா அந்தணனாய்
ஆன தினத்தின் முதலாக
ஓதலும் ஓது வித்தலுமே
உயிருள்ள மட்டும் புரிந்துவந்தார்.

## 11. இயற்கைக் காதல்

பள்ளியில் பாரதி யார்தனையே
படிக்கப் போகச் சொல்லிவிடப்
பாதிநாள் பள்ளிக்குப் போகவில்லை.
பாட்டுப் பாடித் திரிவாராம்

பள்ளிக்குப் போகிற நேரத்திலே
பச்சைக் கிளிகளைப் பார்த்துவிட்டுத்
துள்ளிக் குதிக்க விளையாடி
தோப்புத் துரவுக்குப் போய்விடுவார்

பாடும் பறவைகள் கூட்டத்தையே
பார்த்து மகிழ்வார் அந்நாளில்
ஓடும் நதியின் சலசலப்பை
உற்றுக் கேட்பார் அந்நாளில்



நீந்திக் குதிக்கிற மீனினத்தில்
நெஞ்சு மகிழ்வார் அந்நாளில்
சாந்தி மிகுந்த வனங்களுக்குள்
தவம்புரிவார் அந்நாளில்

சோலையின் அழகை ரசிக்கக்கிட்டு
சுயகவிகளைப் பாடுவராம்
காலை இளவெயில் கண்டுவிட்டால்
களித்து மயில்போல் ஆடுவராம்.

மாலையில் மேகம் சிவக்கக்கண்டால்
மன்னவன் கண்ணும் சிவந்திடுமாம்
இருட்டு கவிந்திடக் கண்டுவிட்டால்
ஏங்கி விடுவார் பெருமூச்சு.

“பூமி யிருண்டு கிடக்கிறதே
இதைப்போக்க வழிஎன்ன” என்பாராம்
வெள்ளி நிலாவைக் கண்டுவிட்டால்
துள்ளிக் குதிப்பாராம் பாரதியார்

இந்த உலகம் அழகாக
எல்லாரும் ஆனந்தம் உடையவராய்
எந்நாளும் வாழ வேண்டுமென்றே
எண்ணி யிருப்பார் பாரதியார்

காவடிச் சிந்து படிச்சிடுவார்
கரும்புபோல் பாட்டுப் பாடுவராம்
பாவடி யொன்றைக் கொடுத்துவிட்டால்
பாடி முடிக்காமல் விடமாட்டார்.

## 12. குட்டிக்கவி

தந்தைக் கரண்மனை உத்தியோகம்
மைந்தனைக் காவல் தடுப்பதுண்டோ

எந்தப் பொழுதும் அரண்மனைக்குள்
இவருக்குப் போக்கு வரத்துண்டாம்

எட்டையா புரத்து ராஜனிடம்
குட்டிக் கவிக்கு மிகநேசம்
சட்டையோ வேட்டியோ வேண்டுமென்றால்
சந்தோச மாகத் தருவாராம்

"அப்பாவைப் போல்நீ பாடுவையோ
சுப்பையா" என்றவர் கேட்டதுமே
தப்பாமல் பாட்டுப் பலபாடி
தத்துவ அர்த்தமும் சொன்னாராம்.

குழந்தை குமர குருபரனோ
குழந்தை ஞான சம்பந்தனோ
குட்டிக் கவிஞனிப் பாரதியால்
எட்டையா புரமும் செழிக்குமென்றே

அந்த மகாராஜா சொல்வாராம்
அடிக்கடி கூப்பிட்டுப் பாடச்சொல்வார்
சந்தனத் தேவன் தெம்மாங்குமுதல்
தாயு மானார்வரை பாடுவராம்

பால்மணம் மாறாப் பருவத்திலே
பாரதி பாடக் கொடுத்துவைத்த
பாக்கிய வானைநாம் கும்பிடுவோம்
பாதத்தையே போற்றிக் கும்பிடுவோம்

தந்தைக்குச் சேதி தெரியாமல்
மைந்தனை மட்டம் எனநினைத்தார்
விந்தை புரிவதை மகராஜன்
விளம்பக் கேட்டு மகிழ்ந்தாராம்.



## 13. பாரதி பட்டம்

பத்துப் புலவர்கள் கூட்டத்திலே
பதினொரு வயதில் பாரதியார்
முத்துமுத் தாகத் தமிழ்பாடி
தத்துவ அர்த்தமும் சொல்லிடவே

பண்டித ரெல்லாம் வியந்தார்கள்
பார்த்த மன்னர் மகிழ்ந்தாராம்
பாரதி யென்று அழைத்தார்கள்
பட்டமும் நிலையாய் ஆனதுவே.

## 14. பள்ளிப் படிப்பு

நெல்வேலிப் பள்ளியில் ஆங்கிலத்தை
நீந்திக் கரைகாணப் படித்துவந்தார்
இந்து கலாசாலைப் பள்ளியிலே
இங்கிலீஷ் கற்றார் மூன்றாண்டு

## 15. சிங்கக்குட்டி

பையன் பெருமை சகிக்காத
பள்ளிக் கூட வாத்தியொண்ணு
பாடம் நடக்கையில் பாரதியைப்
பார்த்தொரு கேள்வியைக் கேட்டாராம்

பாட்டுக் கவனத்தில் பாரதியார்
கேட்டதுக் குத்தரம் சொல்லவில்லை
பார்த்தே வாத்தியார் கிண்டலுடன்
பாரதியைப் பார்த்துச் சொல்லுகின்றார்

மேகத்தைப் போலே கவிபாடி ஊர்
மெச்சத் திரிந்திடும் புலவரய்யா
யோகத்தை விட்டுநீ கண்விழித்து
உத்தரம் சொல்லுநீ என்றிடவே

மேக குணத்தை அறியாமல்
உத்தியோகம் செய்யும்தமிழ்ப் பண்டிதரே
மேகம் நினைத்தால் மழைபெயும்
உத்தியோகத்தைக் கண்டது பெய்யாது

காந்தி மதிநாதன் என்றொருவர்
கடையடி கொடுத்துப் பாடச்சொன்னார்
கவுந்துவ மாகக் கடையடியில்
கவிஞரைக் கேவல மாகவைத்தார்

பாரதி சின்னப் பயல்என்றுதான்
பாவுக்கு ஈற்றடி வைத்தாராம்
பாரதி யாரும் கடையடியில்
பாடலைத் தமக்குப் புகழாக்கி

காந்திமதி நாதனை பார்அதி
சின்னப்பயல் கடையடி பூர்த்திஎன்றார்
காந்திமதி நாதன் முகத்தினிலே
காரிருள் வந்து படர்ந்ததுவாம்.

## 16. விவாகம்

இப்படி ஆண்டுகள் சென்றுவர
ஏரேழு வயதில் பாரதிக்கு



அப்பா மனது மகிழ்ந்திடவே
ஆனந்தக் கல்யாணம் செய்துவைத்தார்

ஏழு வயதுப்பெண் செல்லம்மாவை
இளைஞர் பாரதி கைபிடித்தார்
நாலா நாளில் கவிபாடி
நலங்கு ஊஞ்சல் பாடினராம்

சதுருக் கச்சேரி வைத்தார்கள்
தங்க நாதசுரக் கச்சேரி
சாப்பாடு சீரு செனத்திகளும்
சாலுவை மோதிரம் துப்பட்டாவும்

வந்து குமிஞ்சது கணக்கில்லியாம்
மகாரா ஜாக்கள் அனுப்பிவைத்தார்
இந்தக் கல்யாண விமரிசையை
இன்றைக்கும் சொல்வார் கடையத்திலே

கல்யாணம் ஆன மறுவருஷம்
கவிஞர் தந்தை இறந்திடவே
காசைக் கொட்டிப்பல தொழில்புரிந்து
கடனுக் காளாய் இறந்திடவே

## 17. தந்தை பிரிவு

தந்தை இறந்து விட்டார் - வீட்டில்
தரித்திர மாச்சுதையா
வந்து உதவிசெய்ய - யாரும்
மனிசர் தானுமில்லே

சிந்தைக் கவலையிலே - என்னதான்
செய்வதும் தோன்றாமல்
நொந்து வருந்தினாராம் - பாரதி
நூலில் சொல்லுகின்றார்

**அத்தை** மகாராசி - காசியில்
அனுமந்தக் கட்டத்திலே
**சொத்துக்** குடையவராய் - ரொம்ப
சுகமாய் வாழ்ந்துவந்தார்

**காசிக்கு** வந்துவிடச் - சொல்லியே
காயிதம் போட்டார்கள்
**கவிஞர்** பெருமானும் - அப்போது
காசிக்குப் போனாராம்.

# 18. பாரதியார் காசி வாசம்

**பாரதி** யங்குவந்தார் - அவரைப் - படிக்கவும் வைத்தார்கள்
**சீருஞ்** சிறப்பாகப் - படித்து - சீக்கிரம் தேறிவிட்டார்

**இந்திப்** பரீட்சையிலே - படிச்சு - முந்திவிட்டார் முதலாய்
**சம்ஸ்கிருதம்** படித்தார் - அதிலும் - தங்க மெடலைப் பெற்றார்

**கங்கைக்** கரையினிலே - இருந்து - கவிகள் தொடுப்பாராம்
**தங்கு** தடையின்றி - தமிழும் - கங்கைப் போல்வருமாம்

**பாட்டுப்** படிச்சுக்கிட்டே - நாளெல்லாம் - படகில் சுத்துவாராம்
**கோட்டும்** முண்டாசும் - கட்டியே - குஷியில் இருப்பாராம்

**ஜாதி** மதபேதம் - என்பதே - சற்றும் அறியாமல்
**சகல** பேருடனும் - தோளைத் - தழுவி மகிழ்வாராம்

**கோட்டுச்சட்டை** போட்டார் - ஒருநாள் குடுமியை
வெட்டிவிட்டார்
**மீசை** வளர்த்துவிட்டார் - நாட்டு - வீரனைப் போல்நடந்தார்

**அத்தை** கணவர்சிவன் - பழைய - அந்தநாள் பேர்வழியோ
**இத்தைக்** கண்ணாலே கண்டார் - மிகவும் - இளப்பம்
பேசிவிட்டார்



சிகையை எடுத்துவிட்டாய் - இதுசிவ - நேசருக் காகாது
தலையைக் கிராப்புவைத்தாய் - இதுநம் - தர்மத்திற் காகாது

சாதியில் கெட்டுவிட்டாய் - பந்தியில் - சாப்பிடக் கூடாது
வீதியில்போய்விடு நீ - முகத்தில் - விழிக்காதே போபோபோ!

என்று கடிந்துகொண்டார் - கவிஞர் - இதயம் புழுங்கிவிட்டார்
இதன்பின் மார்கழி மாசத்திலே - மடத்தில் - வந்த திருநாளில்

ஆதிரை நன்னாளில் - அய்யன் - பூசையில் தெரிசனத்தில்
காராம் பசுவைக் கண்டார் - பக்தர்கள் - கனக சபையைக்
கண்டார்

பள்ளி யெழுவதற்கே - திருவெம் - பாவை படிக்கோணும்
பாவை படித்துவரும் - ஓதுவார் - பணத்துக் காசைப்பட்டு

பக்கத்து மடத்துக்குள்ளே - பாட்டு - படிக்கப் போய்விட்டார்
திருவெம் பாவையின்றி - ஈசனுக்குத் - தீபம் எடுப்பதுண்டோ

மருவும் வரலாச்சே - சிவனே - மன்னிக்க வேணுமென்றே
கிருஷ்ண சிவன்அழுதார் - இதனைக் - கேட்ட
அத்தையம்மாள்
அத்தை மகராசி - இதனை - அறிந்து ஓடிவந்தார்.

பாரதியைப் பார்த்து - தலையில் - பரிவட்டம் கட்டிவைத்து
திருநீறு தானெடுத்து - முகத்தில் - திவ்விய மாகப்பூசி

குருநாதன் சந்நிதியில் - அவரைக் - கொண்டு நிறுத்திடவே
பாரதி யாருமப்போ - திருவெம் - பாவையை ஓதுவாராம்

உருகி உருகிச் சொன்னார் - எல்லார்க்கும் - உடம்பு
மயிர்க்கூச்சாம்
மாணிக்கம் சொன்னது போல் - கண்ணீர் - மல்கி
உரைத்தாராம்.

ஆணிப்பொன் னம்பலத்தார் - சபையில் - ஆனந்த
முண்டாச்சு

கிருஷ்ண சிவனும்கண்டார் - பாரதியைக் - கட்டி
அணைத்துக்கொண்டார்

குடுமி எடுத்ததனால் - என்னடா - குருநாதன் நீயல்லவோ?
மீசை யிருந்தாலும் - என்னடா - ஈசனின் பக்தனன்றோ?

வாசகம் பாடியதில் - மாணிக்க வாசகர் தன்னைக்கண்டேன்
உள்ளம் உருகுதடா - அப்பனே - உத்தமன் நீ என்றார்

பாட்டுப் படிப்பாராம் - பாரதி - நாட்டுக் குழைப்பாராம்
காசியில் அங்காளில் - திலகர் - காங்கிரஸ் பிரசாரம்

வீசி யடித்ததங்கே - புயலில் - விழ்ந்தார் பாரதியும்
வீரத் தமிழ்பாடி - நாட்டு - வெறியில் அலையலுற்றார்

நெஞ்சு பொறுக்கவில்லை - நாட்டு - நிலையைப் பார்ப்பதற்கே
அஞ்சிப் பிழைப்பதையே - கண்டு - ஆத்திரமும் கொண்டார்.

வீர வெறிகிளம்பி - பாரதி - வெறித்துப் பார்க்கலுற்றார்
மாரை நிமிர்த்திடுவார் - நடையில் - வானத்தை நோக்கிடுவார்

அடிமைத் தனத்தைக் கண்டால் - பாரதி - ஆத்திரங்
கொள்வாராம்
கோழையைக் கண்டுவிட்டால் - பாரதி - கோபப்படுவாராம்

சாதிப் பிணக்கைக் கண்டால் - பாரதி - சண்டைக்கு
வந்திடுவார்
நாதி யில்லையென்றால் - பாரதி - நானுண்டு என்றிடுவார்

காளைப் பருவமடா - நெஞ்சில் - கவிஞன் உள்ளமடா
நாளைக்கு வருவதையே - எண்ணி - நாணிச் செயல்புரியார்

நாத்திகம் பேசிடுவார் - இந்த - நாட்டை நினைத்துவிட்டால்
ஆத்திகம் பேசிக் கொள்ள - நாட்டு - அடிமைக் குரிமையுண்டோ

வயது இருபதிலே - காசியில் - வாழப் பிடிக்கவில்லை
இந்தச் சமயத்திலே - செல்லம்மாள் - எழுதினள் கடுதாசி.



# 19. கடிதமும் பதிலும்

'அன்பிற் கினியவரே - இந்த
அடிமை சொல்கேளும்
துன்பம் நிரம்பினேன் - உள்ளம்
துடிக்க எழுதுகின்றேன்.

நாட்டு விடுதலையில் - நீங்கள்
நாட்ட முடையவராய்ப்
பாட்டுகள் பாடிக்கொண்டு - அந்தப்
படையில் சேர்ந்துவிட்டீர்

சர்க்காருக் கெதிரிடையாய் - நீங்கள்
சாகித் தியம்செய்தால்
அடித்துப் பிடிப்பார்கள் - சிறையில்
அடைத்து விடுவார்கள் - அதனால்

ஊருக்கு வாரும்' என்றே - அந்த
உத்தமி எழுதிடவே
பாரதி எழுதுகின்றார் - 'அடியே
பத்தினிப் பெண்மயிலே

என்றைக்கும் நல்வழியே - நடப்பேன்
என்ப தறியாயோ
ஒன்றும் பயம்வேண்டாம் - உனக்கு
உள்ளம் நடுங்காதே

பயம்வரும் நேரம் - தமிழைப்
படித்து வந்தாலே
நயம் மிக உண்டாம் - அதனால்
நாட்டுக்கு உபகாரம்'

என்று எழுதிவிட்டுப் - பாரதி
இந்திய பக்தருமாய்த்
தேச நலம் ஒன்றையே - கருத்தில்
சிந்தித்து வந்திருந்தார்.

# 20. எட்டையாபுரத்தில் உத்தியோகம்

தொள்ளாயிரத்து ரெண்டில் - பாரதி
சொந்த ஊருக்கு வந்தார்
எல்லாரையும் போலே - அவரும்
இல்லறம் நடத்தி வந்தார்

சாந்திக் கல்யாணம் - புரிந்தார்
சாதி முறைப்படிக்கே
காந்தனு டன்கூடி - செல்லம்மாள்
களிப்புற் றிருக்கையிலே

எட்டப்ப மன்னனுமே - அழைத்து
இளசைப் புலவரென்றே
பட்டம் கொடுத்துவிட்டுச் - செலவுக்குப்
பணமும் கொடுத்துவந்தார்

ஆஸ்தான புலவரென்ன - அதுவும்
அடிமை வாழ்வன்றோ?
காத்துக் கிடக்கவேண்டும் - ராசனைக்
கவிகள் சொல்லவேண்டும்

இன்னொருவர் மனம்போல் - தமிழை
இசைத்துக் கவிபாடித்
தன்னையும் தன்னுடைய - இனிய
தமிழையும் விடுவாரோ?

# 21. தேசவெறி

இருப்புக் கொள்ளவில்லை மனது எட்டையா புரத்திலே
கருப்புக்கட்டிக் காசைப்பட்டு கற்பகத்தை விடுவதோ?



சுரும்பம்போல படமெடுத்து ஆடுகின்ற மடமையைத்
தடியெடுத்து அடிக்கஎன்று தமிழர் சிங்கம் தோன்றினார்.

தமிழன் என்ற பேரை உலகம் தலைவணங்க வேண்டுமே
சகலருக்கும் மேலே எங்கள் தமிழ்சிறக்க வேண்டுமே

வீரம், கல்வி ஈகை, செல்வம் மீதெழுந்த ஞானமும்
வீறு கொண்டு தமிழர்நாடு வெற்றிகொள்ள வேண்டுமே

வங்க சிங்களம் மராட்டி மற்ற நாட்டு மக்களும்
எங்கள் பெருமை கேட்டுச் சற்று எழுந்து நிற்க வேண்டுமே

தான தர்மம் ஞானம் செல்வம் தமிழர் பெற்று வாழவும்
ஈன மற்று மான மோடு இருக்கச் செய்ய வேண்டுமே

காசி யங்கள் வேண்டுமே கப்ப லோட்ட வேண்டுமே
பூவி லின்பம் யாவையும் பொருந்தி வாழ வேண்டுமே

என்று எங்கள் கவிஞருக்கு எந்த நாளும் ஆசையாம்
எட்டையா புரத்தை விட்டுக் கட்டுச் சோத்தைக் கட்டினார்

நல்லறிஞர் செய்த மற்றை நாட்டுச் சாத்தி ரங்களை
தெல்லி தாஸன் என்றபேரில் செந்தமிழில் செய்துமே

எந்த நாட்டு மக்க ளுக்கும் இந்தியர் சிறப்புடன்
விந்தை யாக வேண்டு மென்று சிந்தையில் நிலைத்துமே

எட்டையா புரத்தை நீக்கி எங்கள் நாட்டுச் சிங்கமும்
இந்தி யாவைக் காக்க வென்று எடுத்துவிட்டார் விரதமே

நாட்டு மக்கள் மடமை போக்கி நாட்டை நல்ல தாக்கவே - அவர்
பாட்டு மட்டும் போதும் ஆனால் பாடுபட் டுழைக்கவும்

தொண்டு செய்து சுதந்தரத்தைக் கொண்டு வந்து தருகவும்
சுத்தமான தமிழை மக்கள் சொத்து ஆக்கித் தருகவும்

கல்டு போலத் தமிழைப் பாடிக் காவியங்கள் தருகவும்
கவிஞர் சிங்கம் எழுந்து அந்தக் கரிசல் காட்டை விட்டதே!

# 22. சென்னையில் சுதேசமித்திரன் உத்தியோகம்

சேது பதிக்கல்விச் சாலையிலே
செந்தமிழ்ப் பண்டித ராகிவிட்டார்
மாதம் இருபது ஆகுமுன்னே
மதுரை வாழ்வும் பிடிக்காமல்

சிந்தையில் தோன்றும் எண்ணமெல்லாம்
தேசத் துக்குச் சொல்லிடவே
சொந்தமாய்ப் பேப்பர் இல்லாட்டியும்
சுதேச மித்திரன் உண்டுஎன்றே

சென்னைப் பட்டினம் தேடிவந்தார்
சேர்ந்தார் சுதேச மித்திரனில்
ஜி. சுப்பிர மண்ய அய்யருடன்
தேசத் தொண்டு செய்துவந்தார்

எண்ணத்தைத் தீட்டி எழுதிடவே
இடமில்லையதில் என்றாலும்
கண்ணைத் திறந்து விடஇதனைக்
கருவி யாகக் கொண்டுழைத்தார்

பாரதியாரின் வாசகத்தைப்
படித்துக் களித்தார் மக்களெ ல்லாம்
பக்தர் வ.உ. சிதம்பரனார்
பாரதி யாரைக் கொண்டாடி

சுப்ர மண்ய சிவாவுமே
சோதரர் போலே பார்த்துவந்தார்
எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும்
இளங்கவிஞர் குரல் முழங்கும்.



# 23. காசி காங்கிரஸ்

காசியில் காங்கிரஸ் கூடுதையா
கர்ஸான் ஆட்சியைக் கண்டிக்கவே

தாதாபா யென்ற மூதறிவோர்
தாவிக் குதிச்சார் காசியிலே

சுயராச்சியமே வேண்டுமெனச்
சொன்னது காங்கிரஸ் தீர்மானம்

பாரதியாரும் காங்கிரஸைப்
பார்க்கப் போயி நின்றிருந்தார்

யாரதி காரம் இந்நாட்டில்
அடிமை வாழ்வு வாழுவதோ

என்று துடித்தார் நம்கவிஞர்
எடுத்தார் பேனா மைக்கூடு

தாதாபாயைத் தாய்நாட்டின்
தவத்தால் வந்தவ ரென்றுரைத்தார்

வங்கத்தை வெட்டிய கர்ஸானை
வாக்கைக் கொண்டு வெட்டிடுவார்

தங்கத்தை கொள்ளை யடித்தார்கள்
தாய்நாட் டையும் வெட்டுகிறார்

வெறியும் கொண்டு துடிப்பாராம்
வீரத் தமிழ்க்கவி பாரதியும்

வீசி நிமிர்ந்து நடப்பாராம்
மீசையிலே கையைப் போடுவாராம்

தீவிர மாகக் காரியம் செய்யத்
தேசம் கூட வேண்டும்

திடவடி யாகச் சுயராஜ் யத்தைத்
தினமே பெற வேண்டும்

வாரும் வாரும் நாட்டு மக்களே
வாரும் வாரு மென்றே

வள்ளல் பாரதி சொல்லிப்
பாடி வந்தார் அந்நாளில்

## 24. இந்தியா பேப்பர் உதயம்

சுடச்சுடப் பாடச் சுதேசமித்திரன்
இடத்தைக் கொடுக்காது
சும்மா இருக்கக் கவிஞர் மனமோ
இடத்தைக் கொடுக்காது

தனக்கொரு பேப்பர் வேண்டும் என்றே
தவித்தார் பாரதியார்
தாய்நாட் டுக்கு உழைக்கப் பேப்பர்
தனியே வேண்டுமென்றே

என்றும் பாரதி சிந்தையில் நாட்டு
எண்ணம் மிகுந்தவராய்
இந்தியாவென்னும் பேப்பர் நடத்த
இறங்கிவிட்டார் தனதாய்

## 25. திலகர் பக்தன்

சூரத் நகரில் காங்கிரஸ் கூட்டம் சுருவம் வெளியாச்சு
பாரத தேசப் படையில் அங்கே பாதிப் பிளவாச்சு



தீவிர வாதத் திலகர் கட்சியில் சிங்கம் பாரதியும்
சிதம்பர னாரும் அரவிந் தருமே சேர்ந்து இருந்தார்கள்

மிதவா திக்கும் தீவிர வாதிக்கும் மிகுந்த சண்டை வரவே
வீரன் பாரதி மிதவாதிகளை வெளுத்துக் கட்டலானார்

திலகரைப் பார்த்து மேதா சொல்லும்
செய்தியைப் போலாக

"ஓய் திலகரே! நம்ம ஜாதிக் கடுக்குமோ?
செய்வது சரியோ? சொல்லும்

சுதந்தரம் என்கிற பேச்சு - எங்கள்
தொழும்புக ளெல்லாம் வீணாய்ப் போச்சு - இது

மதம்பிடித் ததுபோலாச்சு - எங்கள்
மனிதர்க் கெல்லாம் வந்த தேச்சு................ (ஓய்)"

மேதா என்ற அந்தப் பெரிய கிழவனும் திலகர் தரிசனத்தால் சிவபக்தனாக மாற வேண்டும் என்று விரும்புகிறார் பாரதியார். காங்கிரஸின் பிளவு கண்டு வெள்ளையன் கொக்கரிப்பதைக் கருத்தில் நினைத்தார். கவி புனைந்தார். மக்களை மறுபடியும் தட்டி எழுப்பினார்.

## 26. தேசவெறி

"தொண்டு செய்யு மடிமை - உனக்குச்
சுதந்திர நினைவோடா?"

என்று வெள்ளையன் கூறுகிறான். "ஜாதிச் சண்டை போச்சோ? உங்கள் சமயச் சண்டை போச்சோ? நீதி சொல்ல வந்தாய், கண்முன் நிற்கொணாது போடா" என்று வெள்ளையன் கூறுகிறான்.

"உனக்கு சுயராஜ்ய தரிசனம் உண்டா? என்று மதம் பிடித்துப் பேசுகிறான் வெள்ளையன். அதுமட்டுமா? கப்பல் ஓட்டிய தமிழன்

சிதம்பரம் பிள்ளையைத் தூத்துக்குடியில் கைது செய்தார்கள். வழக்கு நடந்தது. விஞ்சு துரை அவரைக் கேள்வி கேட்கிறார். அதிகார மமதையால். இதைக் கண்டார் பாரதியார். அப்படியே கொட்டுகிறார் கவிதையில் -

" நாட்டி லெங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய் - கனல் - மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் - வழி - காட்டுவேன்
கூட்டங் கூடி வந்தே மாதரம்என்று
கோஷித்தாய் - எமைத் - தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் - பொருள் - ஈட்டினாய்."

( வேறு)

என்றே குற்றம் சாட்டு கிறானாம் இங்கிலாந்துக்காரன். இதைக் கேட்ட சிதம்பரம் பிள்ளை ஏது செப்புகின்றார்.

( வேறு)

"சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ - ஜீவன் - ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கு மகாசக்தி
ஏகுமோ - நெஞ்சம் - வேகுமோ?
வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் - முடி - தாழ்த்துவோம்
எந்தமாருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ? - அவ - மானமோ?"

என்று கொடுத்தார் பதில் செய்தி. இதை உரைத்தார் பாரதியார். வந்தே மாதரம் என்றால் தாயை வணங்குகிறோம் என்று அர்த்தம். இந்த வார்த்தையைக் கூடச் சொல்லக்கூடாது அந்நாளில். வெள்ளையன் கொடுமை அப்படி இருந்தது. இந்த மந்திரத்தை உரைத்துக் கப்பலை ஓட்டிய சிதம்பரனார், கல்விக்கடல் சிதம்பரனார், தேச பக்தர் சிதம்பரனார் சிறைப்படுத்தப்பட்டார். சிவா



சிறைக்கனுக்கப்பட்டார். பாரதி ஒருவர்தான் பாக்கி. அடக்குமுறையை அவர் மேல் வீசுமுன்னே அச்சுத்தாள் மேல் வீசினார்கள். இந்தியா பத்திரிகையை நடத்திய சீனிவாசாச்சாரியார் பேரிலும், ஜி. சுப்பிரமணிய அய்யர் பேரிலும் வாரண்டு பிறப்பித்தார்கள். கைது செய்தார்கள்.

இதை அறிந்தார் பாரதி. அது செக்கிழுத்த காலம். கல்லுடைத்த காலம். விலங்கிட்ட காலம். அடித்த காலம். வேற்றுநாடுகளுக்கு அனுப்பிய காலம். "விட்டு விடுதலையாகி நிற்பாய் சிட்டுக் குருவியைப் போலே" என்ற விடுதலைக் கவிஞனுக்குச் சிறையும் கட்டுப்பாடும் பிடிக்குமா? காரியவாதிக்குக் கட்டுப்பாடு பிடிக்குமா? தீவிரவாதிக்குச் சிறைவாசம் பிடிக்குமா? எப்படி எழுதுவது? யாருக்கு அனுப்புவது? எந்தப் பேப்பரில் போடுவார்கள்? விடுதலைப் போர் முடியும் வரை தலைமறைவாக இருந்து பணியாற்ற வேண்டும் என்று கருதினார் பாரதியார்.

## 27. புதுச்சேரி அஞ்ஞாதவாசம்

புறப்பட் டாராம் புதுச்சேரிக்கு இரவோ டிரவாக
போலீ சுக்குத் தப்பிச்சுக் கொள்ள புறப்பட் டாராமே

எழும்பூரிலே ரயிலேறிட்டால் எவரும் பார்த்திடுவார்
ரகசிய மாகப் போக வேண்டும் எனஎண்ணிப் பாரதியும்

சைதாப் பேட்டையில் ரயிலேறிப்போய் தவித்தார் இரவெல்லாம்
தவியாத் தவிச்சுக் காலையிலே புதுச்சேரியில் சேர்ந்தாராம்

இரகசியப் போலீஸ் தொந்தர வங்கே எட்டுப் பங்காச்சு
ஈதுக்கெடுத் தாலும் பாரதியாரை ஈயாய் மொச்சிச்சு

முள்ளுப் போலக்குத்தி யெடுத்தார் முசுலாம் படைபோலே
என்று விதைச்சால் போலே எங்கும் ஈசல் கூட்டம் போல்

மொச்சார் பாரதி மலரை இதழாய்ப் பிச்சு எடுத்தார்கள்
நச்சுஅரித்தார் பாரதியாரை நாழியும் விடவில்லை.

கட்டிப்பிடிச்சுத் தூக்கி போயி பிரிட்டிஷ் எல்லையிலே
கடத்திப் போயிக் காட்டிக் குடுக்கத் திட்டம் போட்டார்கள்

பிரெஞ்சுப் போலீஸ், பிரிட்டிஷ் போலீஸ் மிரட்டி எடுத்திடுறார்

இருபுறம் அடிக்கும் மத்தளம் போலே இருந்தார் பாரதியும்.

## 28. குவளைக்கண்ணன்

எந்த நேரத்தில், எந்த வேஷத்தில் எப்படி வருவார்கள் என்று தெரியாது. எமதூதரைப் போலவே வருவார்கள். பாரதிக்கு இடம் கொடுத்த வீட்டுக்காரரை ஒரு நாள் பயமுறுத்தினார்கள். அவர், பாரதியை வீட்டைக் காலி செய்யச் சொன்னார். கையிலோ காசில்லை, ஊர் புதியது. தெரிந்த மனிதர்களில்லை. திண்டாடும் நேரத்தில் -

"எங்கிருந்தோ வந்தான்"

என்று வந்தான் கண்ணன். குவளைக் கண்ணன். இவர் பெயர் குவளை கிருஷ்ணமாச்சாரி. திருவல்லிக்கேணியில் கோயில் சுயம்பாகி. பாரதியாரின் பரம பக்தன். பீமன். கவிஞருக்குக் காவலன். நாம் வணங்கத்தக்கவன். உயிரைக் கொடுத்தும் பாரதியாரைக் காப்பவர். பாரதியார் புதுச்சேரியில் என்ன பாடு படுகிறாரோ என்று பட்டினத்தில் எண்ணினார். பறந்தோடி வந்தார். வேறு வீடு பிடித்துப் பாரதியாரை வைத்தார். கூடவே இருந்து பாரதியாரைப் பாடச் சொல்லி ஆனந்திக்க ஆரம்பித்தார்.

## 29. பல தொல்லைகள்

அதற்குப் பின்னே அறிந்தது புதுவை
அறிஞர் இவரெனக் கண்டது புதுவை
கவிஞர் வந்தார் கையை எடுப்பார்
கரமும் குவிப்பார் காசும் தருவார்



வீர விளக்கு வா.வே.சு வும்
விஞ்ச மிகுந்த அரவிந் தருமே
வந்தார் புதுவை வாசம் செய்ய
நம்தே சத்துப் பக்தர் மூவர்

பாரதிதாசன் குவளைக் கண்ணன்
அப்பாத் துரையும் அம்மாக் கண்ணும்
சிங்கம் போலே தமிழை எழுதிச்
சிறுவர் எங்களை ஆதரித்து
சங்கம் போலே தமிழை வளர்த்த
எங்கள் வ.ரா. அங்கே இருந்தார்
எல்லா ருக்கும் பாரதியாரைத்
தங்கள் தங்கள் அன்பர் என்றும்
தாமே அவருக் கினியர் என்றும்
எங்கும் சொல்வார் இதிலே சண்டை
எத்தனை யோதான் நிகழ்ந்த துண்டு.

கண்ணன் பாட்டு கட்டுரை கோடி
காதற் குயிலின் கவிதைப் பாட்டு
எண்ணக் கடலாம் நான்மணி மாலை
எத்தனை எத்தனை கட்டுரை கதைகள்
எல்லாம் பாடப் பாண்டிச் சேரி
இல்லம் தானே இடமு மாச்சு.

பாட்டு, கூத்து, பட்டினியுண்டு,
நாட்டு விடுதலை நாளும் நினைவு
காட்டிக் கொடுக்கும் ரகசியப் போலீஸ்
காரர் கூட்டம் தானும் உண்டு.

ஒருநாள் ஒருவன் ரகசியப் போலீஸ்
ஒற்றன் புலவரைப் போலே நுழைந்தான்.
"வணக்கம் யாமோ இலக்கணம் அறிவோம்,
வந்துற் றோம்உம் வாழ்த்துப் பெறவே"
என்றான் பாரதி தம்மை நோக்கி
எங்கள் கவிஞர் ஏதோ போக்கில்

(வேறு)

"நாயும் பிழைக்கு மிந்தப் பிழைப்பு
நாளெல் லாம்மற் றிதிலே உழைப்பு
பாயும் கடிநாய்ப் போலீசுக் - காரப்
பாப்பானுக் குண்டிதிலே பீசு."

என்று பாடிக் கொண்டிருந்தார். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது. அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் பேர்வழி.

வந்த ஒற்றனும் கைவாய் பொத்தி
குத்த நெஞ்சம் குறுகுறுப் பாகி,
குத்திக் குடைய குலிந்து வணங்கி
தப்பிதம் செய்தேன் தயைசெய் வீரே
புலவன் அல்லன் போலீஸ் என்றே,
கும்பிடு போட்டு நடந்தான் கேட்டு.
குலுங்கக் குலுங்க நகைத்தார் கவிஞர்.

ஒருநாள் பாரதியார் வீட்டில் இல்லை. அந்தச் சமயம் திருடன் புகுந்து விட்டான் வீட்டில். அள்ளிக் கொண்டு போய் விட்டான். எதை? அண்டாவையா, செம்பையா? அல்ல. அவருடைய கடிதங்களை, கையெழுத்துப் பிரதிகளை, இது சி.ஐ.டி-க்களின் வேலை. மற்றொரு நாள் ஒரு பெரிய ஆபத்து. அவர் வீட்டு வேலைக்காரனைக் கடத்திப் போய் சென்னையில் சிறை வைத்து, அடித்து, உதைத்து, பாரதியாரின் அரசியல் நடவடிக்கையை விசாரித்துவிட்டுப் பயனின்றி விடுதலை செய்தார்கள். மற்றொரு நாள் அவரையே ஒரு நண்பர் அழைத்துப் போய் விட்டார். தெருவில் கண்டார். "நமஸ்காரம்" என்றார். "உங்கள் மீதுள்ள வாரண்டு ரத்தாகி விட்டது. வாருங்கள் சென்னைக்குப் போகலாம்" என்று அழைத்தார். தம் செலவில் மோட்டாரும் அமர்த்தினார். தாய்நாட்டில் காலடி எடுத்து வைக்கும் ஆவலில் தாவியேறினார் பாரதி. புறப்பட்டது மோட்டார். பறக்கிறது. வேகம்... பாட்டு... பாட்டு...

"விடுதலை! விடுதலை! விடுதலை!
பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவ ருக்கும்மறவ ருக்கும் விடுதலை."

மோட்டார் திருப்பாதிரிப்புலியூர் அருகே வரவே, எதிரில் ஒரு கார் வந்தது. அதிலிருந்தவர் பாரதியாரைப் பார்த்தார். தம் காரில் ஏறச் சொன்னார். "பிறகு சென்னைக்குப் போகலாம். உம்மிடம் ஒரு விஷயம் பேச வேண்டும்" என்று கூறிப் புதுச்சேரியில் கொண்டு வந்து விட்டு விட்டார். "ஐயோ கவிஞரே! வந்தவன் சி.ஐ.டி. அல்லவா? உம்மை ஏமாற்றிக் கொண்டு போகப் பார்த்தானே" என்றார்.

உடனே பாரதி,

"பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே - நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே.

பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான். (பகைவ)

தின்ன வரும்புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே! (பகைவ)

என்று பாடினார். நாட்கள் சென்றன. அஞ்ஞாதவாசம் வருஷம் பத்தாகிவிட்டது. கவிஞர் உள்ளம் துடித்தது. "நாளொன்று செல்ல நான்பட்ட பாடு தாளம் படுமோ, தறிபடுமோ" என்ற நிலை.

"தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழு தாக - எனது
நெஞ்சந் துடிக்குதடி"

என்று துடிப்பார். ரிக்வேதம் படிப்பார். உபநிஷதம் படிப்பார். யோகம் புரிவார். முருகனைக் காண்பார். சூரியஸ்தோமம், வேள்வி எல்லாம் பாரத நாட்டுக்காக பாரத மாதாவின் விடுதலைக்காக. நாளாக ஆக அஞ்ஞாத வாசம் அலுத்தது. ஒரு நாளா, இரண்டு நாளா? பத்து வருஷங்கள் பாடுபட்டார். பற்பல அற்புத காரியங்களைச் செய்தார். அருமைத் தமிழுக்கும் அன்னை நாட்டுக்கும் பெருமையைத் தேடித் தந்தார். தம் குழந்தைக்கும் பாப்பாப் பாட்டு பாடிக் கொடுத்தார்.

இந்த அஞ்ஞாத வாசத்தைக் காட்டிலும் சிறையில் கிடப்பது நலம் என்று எண்ணினார். 1912ஆம் வருஷம் ஒருநாள் தம் குழந்தை, மனைவி சகிதம் புறப்பட்டு விட்டார் சென்னைக்கு. கடலூரில் காத்திருந்தது வாரண்டு. கைது செய்தார்கள். சிறையில் அடைத்தார்கள். அந்தப் பிரசாதமும் அவருக்குக் கிடைத்தது.

## 30. சிறைவாசம் - விடுதலை

செந்தமிழ்க் கவிஞன், எந்தை, எம்பெருமான் சிறையிலிருந்தார். இருபது நாள்கள். நொநதது உள்ளம். வந்தது பலவீனம். அந்தோ, அந்தோ என்று அலறியது தேசம். பிறகு விடுதலையானார். அதுவும் எப்படி? ஓர் ஊரிலேயே தங்க வேண்டும். கண்காணிப்பு அவசியம் என்ற நிபந்தனையோடு விடுதலை செய்யப்பட்டார்.

அந்தப் பத்து வருஷங்களில் புலவர் பெருமானின் உடல் நலம் குன்றிவிட்டது. உள்ளத்தில் புகுந்த கவலை உளுப்போல அரித்து விட்டது. திலகர் நாடு கடத்தப்பட்டிருந்தார். சிதம்பரம் பிள்ளை சிறையில் கிடந்தார். சிவா சிறையில் நவம் செய்தார். நமது கவிஞர் பெருமானோ தாமே மேற்கொண்ட புதுவைச் சிறையில் பத்தாண்டு அவதிப்பட்டு உடல் பாழாயிற்று. தமிழுக்கு வந்தது யோகம். நமக்குக் கிடைத்தது செல்வம். நாட்டுக்கு உயர்ந்தது அறிவு.

## 31. எட்டையாபுரத்திற்கு வந்தது

பாரதி யாரும் எட்டை யாபுரம் பார்க்கவே வந்தாராம்.
பெற்று வளர்த்த ஊரில் தங்க பிரியமாக வந்தார்



உறவு வெறுத்தது நாடு வெறுத்தது ஊரார் வெறுத்தார்கள்
உள்ளன் பிருந்தும் காட்டிக் கொள்ள ஊரார் வரவில்லை

அரசாங் கத்தின் விரோதி இவரை ஆதரித்தல் பிசகு
அறிந்தால் போலீஸ் நம்மையும் சிறையில் அடைத்திடு
வாரென்றே

பேசப் பழகக் கூடப் பயந்து கதவை அடைத்தார்கள்,
பித்தன் என்றும் பைத்தியம் என்றும் வைதார் பலபேர்கள்

பாரதி யாரும் கடையம் சென்ற பாறை மேலுலவி
படைப்பி லதிசயம் பார்த்து மகிழ்வார் பாட்டுப் பாடுவார்.

## 32. யாதுமாகி நின்றாய்

கடையத்தில் தன்னந் தனிமையிலே
காட்டுக்குள் போனார் அங்கொருநாள்

இடையர் குலத்துச் சிறுவர்பலர்
இன்ப முடன்விளை யாடிநின்றார்

வேப்பம்பழந்தை உலுப்பித் தின்று
வீழும்மழைநீ தண்ணி குடிச்சிக்கிட்டு

ஆப்பம், வடை, தோசை, என்றுருண்டை
அத்தனையும் கதையாய்ப் பேசிக்கிட்டுப்

புறிச்ச பழத்துக்குச் சண்டையிட்டுப்
பாதியைப் பங்கி பிரிச்சுக்கிட்டு

கடிச்ச பழத்துக்கு அடிச்சுக்கிட்டு
கலகம் நடக்கிற நேரத்திலே

பாரதி யாரும் கண்டுவேப்பம்
பழத்தைத் தின்பது ஏனெனவே

பட்டினிக் கொடுமை தின்னுகின்றோம்
பாழும் வவுத்துக்கு இல்லையென

வேப்பம் பழத்தை உலுப்பித்தந்தார்
காயைக் கவிஞர் பொறுக்கித்தின்றார்

காயின் கசப்புத் தெரியவில்லை
கருணை பிருந்த உள்ளத்திலே

வேம்பும் கசப்பில்லை விரும்பித்தின்றால்
வெல்லத்தைப் போலே இனிக்குதென்றார்

ஆண்டவன் படைப்பில் அத்தனையும்
அமிர்தம் அமிர்தம் என்றுரைத்தார்

சிங்கத்தில் வாழும் பரசிவமே
சித்தெறும்புள்ளும் இருக்குதுபார்

தங்கத்தைப் போலவே காரிரும்பும்
தரைக்குபயோக மென்றிடுவார்

## 33. சிங்கத்துடன் உறவு

திருவனந்தபுரம் காலேஜிலே
சிங்கத்தைக் கூண்டிலே கண்டுவிட்டார்
குரங்குக்கு வாழைப் பழம்கொடுத்தார்
குருவிக்குப் பட்டாணிக் கடலைபோட்டார்

மானைத் தடவிக் கொடுத்துவிட்டு
வாயிலே புல்லும் கொடுத்துவிட்டார்



சிங்கம் புலியையும் தம்முடைய
சிநேகிதன் என்று உரைத்துவந்தார்

பொல்லாத சிங்கத்தைப் பார்த்துஅதன்
புடரியைத் தடவ ஆசைப்பட்டார்
காவற்காரன் ரொம்பத் தடுத்திடவே
கவிஞர் பாரதி சொல்லுகின்றார்

"காணடா சிங்கத்தை என்னுடனே
கட்டிக் கலந்து விளையாடும்"
என்று உரைத்தபின் பாரதியார்
"எந்தன் அருமைச் சிநேகிதனே

கான விலங்குக்கு நீ அரசன்
கவிக்கு அரசன் வந்துள்ளேன்
ஈன அடிமைக ளாகிவிட்டோம்
இருவரு மேஷன்று தானதிலே

என்னிலும் உன்னிலும் உள்ளிருந்து
இலங்கு மாசக்தி மேலாணை
கர்ஜித்து இப்பொழுது கையைக்கொடு
காண்பவர் அறிவு பெறட்டு"மெனச்

சிங்கம் உறுமியே வாலாட்டிச்
சிநேகிதன்போலே அருகில்வர
பாரதி பதனைத் தடவிவிட்டார்
பார்த்தவர் பதைத்து நின்றார்கள்.

## 34. அடியேனுக்கு குரு தரிசனம்

கடையத்தை விட்டுவிட்டு - பாரதி - காரைக்குடிக்கு வந்தார்.
காரைக்குடியில் ஒருநாள் - ஊரைக் - காக்கும் பிடாரி முன்னே

கொப்புடை நாயகியாள் - பெரிய - கோயிலின் வாசலிலே கருப்புக் கோட்டுப் போட்டு - நெத்தியில் கலந்த சிந்தூரப் பொட்டும் வச்சுக்கிட்டு - ஒருநாள் - புலம்பிப் பாடு கின்றார்.

"தேடிஉனைச் சரணடைந்தேன் தேச முத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரம் தருவாய்!"

"துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள்முத்து மாரி!

தோல்வெளுக்கச் சாம்பலுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள்முத்து மாரி!

மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள்முத்து மாரி!

மனம்வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள்முத்து மாரி!"

என்றே பாடி நின்றார் - அவர்தன் - எழிலில் நான் மயங்கி நின்று தரிசித்தேன் - மனத்தில் - நீங்காக் கோயில் கொண்டார். பத்து வயசினில் - வெகுவாய்ப் - பதிந்தாரென்மனத்தில் முதது முத்துப் போலே - பாட - மூல குருவானார்.

# 35. காந்தி தரிசனம்

1919ஆம் ஆண்டில் தேசத் தந்தை மகாத்மா காந்தி, ரௌலட் சட்ட சம்பந்தமாய்ப் பிரசாரம் செய்ய சென்னை வந்திருந்தார். அப்போது ஒருநாள் முதல் முதலாக பாரதியார், மகாத்மாவை வீட்டில் போய்ச் சந்தித்தார். எதிரில் உட்கார்ந்தார். "உமது முயற்சி வெல்லுக" என்று ஆசீர்வதித்தார். "மிஸ்டர் காந்தி! இன்று ஒரு கூட்டத்திற்குத்



தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?" என்று கேட்டார். அவருக்கு வேறு அலுவல் இருந்ததால் இணங்கவில்லை. உடனே கவிஞர் எழுந்து விட்டார். இந்த வெறிபிடித்த புலவரை, திவ்யதேஜஸ்வியைப் பார்த்த அய்யன், "இவர் யார்?" என வினவினார். "எங்கள் தமிழ்நாட்டுக் கவிஞர்" என்று உரைத்தார் பக்கத்தில் இருந்த ராஜாஜி. "இவரை சர்வ ஜாக்கிரதையாகக் காக்க வேண்டும்" என்று கூறினார் மகாத்மா.

இருவர் கண்களும் அப்போது சந்தித்தன. கங்கையும் யமுனையும் கலந்தன. கருணை வெள்ளம் கலந்தோடியது. இன்பத்தேன் பிறந்தது. இனிய கீதம் வெளிப்பட்டது. கவிஞனின் வாக்கு, சத்தியத்தின் உத்வேகம், அறிவுச் சொல், அன்பின் ஆசி, உண்மை, அதுவே சத்தியம்.

"வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா நீ வாழ்க வாழ்க..."

நாடு வாழ்வு பெறும் என்று நம்புகிறார் பாரதி. காந்தியால் நாடு சுதந்தரம் பெறும் எனக் கண்டார். வாழ்நாளெல்லாம் தாம் உழைத்த அன்னையின் விடுதலைக்கு அய்யன் தோன்றியதை அன்றைக்கே உரைத்துவிட்டார் கவிஞர் பெருமான்.

"ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
(ஆடுவோமே)
எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு - நாம்
எல்லாரும் சமமென்ப துறுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி யூதுவோமே - இதைத்
தரணிக்கெல் லாம் எடுத் தோதுவோமே
(ஆடுவோமே)

என்று முழங்கினார். மனத்தில் இன்பம் ஏற்பட்டது.

# 36. பதறி நின்ற யானை

சர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்ற சமரச பாவமும் சம நோக்கும், ஞான ஒளியும் சுடர்விட்டுப் பிரகாசித்தன. அப்போது அழைப்பு வந்தது சென்னையிலிருந்து. சென்றார் கவி. மறுபடியும் சுதேச மித்திரனில் உத்தியோகம் செய்தார். திருவல்லிக்கேணியில் வசித்தார். தினந்தோறும் பார்த்தசாரதி கோயிலுக்குச் செல்வார். கீதையுரைத்த எம்பெருமானைப் பணிவார். "எனது நாட்டுக்கு நான் பாதை வகுக்கும்படி அருள்வாய்" என்று வேண்டுவார். தேங்காய் மூடியுடன் வெளியே வருவார். அங்கிருக்கும் யானைக்குத் தேங்காய் மூடியைக் கொடுப்பார். அது தின்பதைப் பார்த்துக் குழந்தைபோல் குதூகலப் படுவார்.

ஒருநாள் மாலை ஆறு மணி. தேங்காய் மூடியை யானைக்குக் கொடுத்தார். யானை மதங்கொண்டிருந்தது. கவிஞரைத் துதிக்கையால் பிடித்துத் தூக்கித் தனது கால்களுக்கிடையில் போட்டு மிதிக்கப் போகும் சமயம், என்ன காரணத்தாலோ மிதியாமல் அப்படியே நின்றது. பாரதியாரின் உடலெல்லாம் ரத்தம். தரையெல்லாம் ரத்தம். கூட்டம் கூடிவிட்டது கூவென்றலறினார்கள். யானையும் அலறுகிறது. எங்கிருந்தோ வந்தான் குவளை. வேலியைத் தாண்டினான். கவிஞரைத் தூக்கினான். வெளியே குதித்தான். தன் தவறுதலை உணர்ந்த யானை அப்படியே கண்ணீர் வடித்து நின்றது. கவிஞர் பிழைத்தார் கண்ணன் அருளால், பிறகு ஒருநாள் பாரதி சொல்லுகிறார்: "இன்னாரென்று தெரிந்தால் தள்ளியிருக்காது. என்னைக் கொல்லாமல் விட்டதில் இருந்தே அந்த யானை எவ்வளவு நல்லது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்" என்று.

கோயிலுக்குப் போவார் - யானைக்குக்
கொடுப்பார் தேங்காயை
பாவி அந்தயானை - தின்பதைப்
பார்த்து மகிழ்ந்திடுவார்

மாலை மணிஆறில் ஒருநாள்
மன்னன் பாரதியார்



யானைக்குத் தேங்காயை - மிகவும்
அன்புடன் நீட்டிடவே

மதம்பிடித்திருந்த - அந்த
மாபாவி வேழமது
தும்பிச்சங் கையாலே கவிஞரைத்
தூக்கி எடுத்தேதான்

காலுக்கு நடுவினிலே போட்டு
கவியை மிதிக்கவர
சிங்கத்தைக் கண்டதுவோ கவிஞர்
சிரித்த முகத்திலிலே

அரியைக் கண்டதுவோ - யானை
அறிஞர் முகத்தினிலே
மோதி மிதிக்காமல் - யானை
கதறி யழுததுவே

எங்கிருந் தோவந்தான் - குவளை
என்னும் கவித் தோழன்
வேலியைத் தாண்டிவிட்டான் - கவிஞரை
வெளியில் கொண்டு வந்தான்

கவிஞர் பிழைத்துவிட்டார் - அந்தக்
கண்ணன் தயவாலே
உடம்பு சுகமாகித் - தேற
ஒரு மாசமாச்சு

கவிஞர் சொல்லிடுவார் - அந்தக்
களிறு நல்லதுதான்
இருட்டு நேரத்திலே - என்னை
எவரென்ற றியாமல்

குருட்டுத் தனமாகத் - தூக்கிக்
கொடுமை செய்திட்டது
பாரதி யென்றதுமே - அதுவும்
பதறி நிற்கலியோ

# 37. சொல்லும் செயலும் ஒன்றாய் வாழ்ந்த மகாகவியை வாழ்த்துவோம்

1921ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 11ஆம் தேதியன்று தம் பூத உடம்பை இழந்தார். நமது உள்ளத்தில் கலந்தார். செந்தமிழ்த் தாயின் புகழை இந்த ஜகமெல்லாம் போற்றச் செய்தார். நினைத்ததை எழுதினார். எழுதியபடி நடந்தார். அவரும் அவர் காவியமும் என்றும் ஒன்றாகவே இருந்து வருவதை நாம் காண்கிறோம். நமது சொல்லும் செயலும் ஒன்றாகுமாறு அந்தக் கவியை நாம் போற்றுவோம்.

செந்தமிழ்த் தாயின் மைந்தன் பாரதி தேசத்துக் கவிஞன்
சீமானாகிய பாரதி யாரைச் சிரம் வணங்குகின்றோம்

சொல்லும் செயலும் ஒன்றாய் - வந்த - சுதந்தரக் கவிஞரையே
அல்லும் பகலும் வாழ்த்தி - வணங்கி - அடியைப்
போற்றுகிறோம்

உத்தம மாகிய கவிஞன் - எங்கள் - உலக மகா கவியை
நித்தம் நினைத்துத் தமிழைப் - பாடி - நிகரில்லாது
வாழ்வோம்

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர், வாழிய பாரத
மணித்திரு நாடு"
வாழிய வென்று வாக்குக் கொடுத்த மகாகவியை
வாழ்த்துகிறோம்.

☆ ☆ ☆



# கம்ப ராமாயணச் சிந்து

## கொத்தமங்கலம் சுப்பு

கன்னித் தமிழ்பாட காகுத்தன் புகழ்பாட
கம்பன் வழிதனிலே கதை சொல்லி நான்பாட
பொன்னி நதியைத் தந்த பொதியமலை மாமுனியே
முன்னிற்க வேணுமையா முத்தமிழும் தரவேணும்

கற்பக விநாயகரே கருத்தைத்தர வேணும்
சொற்கட்டும் இலக்கணமும் சுளுவாக வரவேணும்
ஆணிமுத்தைப் போலாக அழகும் உறுதியுடன்
வாணி சரஸ்வதியே வாக்கைத் தரவேணும்.

செந்தாமரைத் திருவே செல்வமும் நீதந்து
நந்தா விளக்காக நான் வாழச் செய்திடுவாய்.
பால்போல் நயமுடைய பாலகாண் டம் பாட
வேலேந்தும் முருகப்பா வித்தையை நீ தந்திடுவாய்.

## நூல்

அறிவுக்கு அறிவாகி ஆராய்ச்சிக் கப்பாலாய்
அன்புக்குக் கட்டுண்ட அந்தப் பரந்தாமன்
பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளிகொண்டிருந்தாலும்
பக்தர் குரல் கேட்டால் பரிவுடனே ஓடிவந்து
மீனாகி ஆமையாய்க் கூனாகிக் குறளாகி
ஆனபல பிறப்பில் அன்பர்க்குத் தானுழைத்து
பள்ளிகொண்ட பாவனையாய்ப் படுத்தும் உறங்காமல்
கள்ளத்துயில் செய்து காவல்காக்கும் பெருமாள்
எள்ளளவும் தூக்கமின்றி என்னாளும் விழித்திருந்து
நீரில் குதிக்கிறதும் நீதிநூல் காக்குறதும்

பாரமலை மத்தாகப் படுத்திருந்து சுமக்கிறதும்
பாயாய் நிலஞ்சுருட்டி பாதாளந் தன்னில் வைக்கப்
பன்றி உருவெடுத்துப் பாரிதனைக் காக்கிறதும்
வனத்து மிருகம் போல் வாழ்ந்தவர்கள் மமதைகளை
நரசிங்கமாக வந்து நகத்தாலே கிள்ளுறதும்
கூனிக் குறுகி நின்று கொடுமென்று கைநீட்டி
வானத்தை ஓரடியால் வைத்தளந்த நெடுமாலாய்
அரசர் கொடுமை யெல்லாம் அழிந்திடவே அந்தணனாய்
வரிசை கெட்டு மழுவேந்தி வம்சம் அழிக்கிறதும்
ஆனமட்டும் பூவுலகில் அதர்மம் தனை அழிக்க
வானைவிட்டு வந்து வந்து மண்ணில் பிறக்கிறதும்
வைகுந்த வாசம் விட்டு வணங்கும் தகுதிவிட்டு
கைகொண்ட மட்டுக்கும் கருணைப்படி யளந்து
துட்டர் கருவறுத்து தூயோர் குலம்வளர்த்து
இட்டமுடன் யுகந்தோறும் இங்கே பிறப்பெடுத்து
வேசத்துக் கேத்தபடி விதரணையாய்த் தான் நடித்து
மாசற்று வாழும் வழி மனிசருக்குப் பாடஞ்சொல்லி

கௌசலைக்குப் புத்திரனாய் கௌசிகர்க்கு மித்திரனாய்
தசரதற்குப் புத்திரனாய் தரைக் கெல்லாம் உத்தமனாய்
சீதைக்கு நாயகனாய் நீதிக்கு தாயகமாய்
ஆதிக் கடவுள் வந்து அவதாரம் செய்திருந்து
எனக்குரங்குகட்கும் ஏழைக் குகன் தனக்கும்
ஞானி முனிவருக்கும் நானொன்றே என்னும்படி
மனிதர் குலம் வாழ வழிகண்ட வான்பொருளை
இனிதான தருமநெறி எடுத்துச் சொன்ன இராகவனை
காக்கும் திருமாலை காகுத்தப் பெருமானை
வாக்கு மனதுக் கெட்டா வள்ளல் பெருங்குணத்தை
பாற்கடலைப் பூனைக்குட்டி பருகவந்த பாவனைபோல்
நாற்கவியும் தானறியா நான்பாட வந்த செயல்
கண்ணற்ற பேர்களுக்குக் கம்புண்டு வழிகாட்ட
கம்பனுண்டு நான்பாட கைக்கோலாய் உதவுகிறான்.
கம்பன் வழிதனிலே கதை சொல்ல வந்து நின்றேன்
அன்புடைய பெரியோரே ஆசி செய்ய வேண்டுகின்றேன்.



(வேறு)

ஆக்கலும் காத்தலும் நீக்கலு மாகிய
அத்தனையும் அவன்விளையாட்டு
வாக்கிலும் மனத்திலும் என்றும் நிறைந்திடும்
வைகுந்த வாசனைப் பாடிடுவோம்.

வீதி மணலிலே வீடு கட்டி - அதில்
விளையாடும் பிள்ளைகள் வீட்டைக் கண்டு
மாதொழில் செய்திடும் சிற்பியெல்லாம் - அதில்
மனை யடிச் சாத்திரம் பார்ப்பாரோ

முத்தமிழில் கவி பாடிய கம்பனை
நித்தம் படித்திடும் உத்தமரே
பித்தனைப் போல் நான் பிதற்றினாலும்
உத்தமன் கதையென்று கேட்பீரே.

நாட்டு வளம் பாரும் - கம்பன்
பாட்டு வளம் பாரும்
திருநீறு பூசிய சிவன் போலே - எட்டுத்
திசையும் பறந்திட்ட வெண்மேகம்
திருமாலைப் போலே நிறமாகி - மழை
சிந்தியே வெள்ளம் பெருக்கிடுதாம்.

மாமன் மனசு குளிரவைக்க - உள்ள
மாப்பிள்ளை அக்கறை கொண்டது போல்
மலைகள் குளிர மழை பொழியும் - எவ
வாரிகள் மேகத்தை அனுப்பிடுமாம்
தாய் முலைப் பாலைப்போல் ஊட்டி வளர்த்திடும்
சரயு மகாநதி பெருகியதாம்
ஞாயிறு குலத்து ஞாயத்தைப் போலவே
பாயுது பாயுது நஞ்சையிலே.

தேன் பெருகும் நாடு - அயோத்தி
தெய்வம் வரும் நாடு
கரும்பின் சாறோடும் பாளை கட்டிய சொட்டுகள் ஆறோடும்.

பூவில் தேன் பெருகும், மலைப் பொந்துகளில் கூடுதேன்
சொரியும்
கனிகள் கனை வெடித்தே அந்தக் கழனிகளில் சுவைத்
தேனோடும்
வாய்க்கால் மீன்களெல்லாம் தங்கள் வாயில் இனிப்புடன்
தாவிவரும்
உப்புக் கடல் இல்லையாம் அந்நாட்டில்
உள்ள கடல் நீரும் இனித்திடுமாம்.

ஆயி கொலுவிலமர்ந்தாள் - மரு
தாயி கொலுவிலமர்ந்தாள்
வாயிலே சோறூட்டும், நஞ்சை வயலுக்கும் மலருக்கும்
பசுமைக்கும் அதி தெய்வம் [ஆயி]

சிறுவண் டினங்கள் இசைபாட தோகை மயில்கள் நடமாட
தித்திமி எனவே மேகம் குமுறி மத்தளங்கொட்ட மின்வெட்ட
கைத்தீபம் போல் செந்தாமரைகள் காற்றில் அசைந்தே
ஒளிகாட்ட
உத்தமி நம்மைக் காக்கும் தாயார் உலகுக்குண
வுண்டாக்கும் தாயார் [ஆயி]

அலையெல்லாமவள் திரைச்சீலை ஆகாயமவள் சிந்தனைகள்
மலை யெல்லாமவள் ஆபரணம் மாநதியெல்லாம் கண்ணாடி
விலையில்லா நெல் வயலோசை வீணை இசைத்திடும்
சுதிநாதம்
கலை எல்லாம் அவள் கருணையினால் காக்கும் தாயாம்
மருதாயி

ஆடலும் பாடலுமே - சூழ்ந்த அயோத்தி மாநகரில்
ஆடவர் வீரர்களாம் பெண்களோ அன்பில் நிறைந்தவராம்
கல்வியும் செல்வமுமே பொருந்திய கன்னியிவர் நாட்டில்
நல்ல அறிவுகளெல்லாம் பொருந்தி இல்லறம் செய்வாராம்
நந்தவனங்களென்றே நாட்டில் நாலு சுவர்க்குள் இல்லை
எந்த வனங்களுமே - அந்நாட்டில் நந்தவனந்தானாம்
பொய்சொல்லா மெய்யரையே - தெய்வமாய்ப்
போற்றுவதில்லையங்கே
பொய்யில்லை அந்நாட்டில் அதனால் மெய்க்கு
மதிப்பில்லையாம்



குற்றங்களில்லாத காரணத்தால் - கூற்றுவன் கொடுமை
கிடையாது
அடிதடிச் சண்டை கிடையாது - அங்கு ஆயிரம் கட்சி
கிடையாது
எல்லாரும் கல்வியுடையவராம் - அறிவு இல்லாத
பாமரரில்லையங்கே
பொல்லாத காரியம் செய்யவே தூண்டிடும் புத்தகமில்லை
அந்நாட்டிலே
எல்லாரும் செல்வமுடையவராம் - அங்கு ஏழை பணக்காரன்
பேதமில்லை
மஞ்சளழகும் நடையழகும் கண்டு மதிப்பதில்லை
அந்நாட்டினிலே
நெஞ்சில் உதித்திடும் நற்குணமே கண்டு நினைப்பார்
அழகு எனவேதான்
யாசகம் பிச்சை நிதி திரட்டல் முதல் - அதிகார டிக்கெட்டு
விற்பனையும்
காசுக்கு வேஷமும் கிடையாது அங்கு கர்ணன் கொடையும்
கிடையாது.

(வேறு)

வள்ளல்கள் இல்லாத நாடு - ஏனெனில்
வாங்குவார் என்பதே இல்லாத நாடு
வாள்வலிமை செல்லாத நாடு - ஏனெனில்
வம்புக்கு வருவாரும் இல்லாத நாடு
சத்தியத்தைப் புகழாத நாடு - ஏனெனில்
சாமர்த்தியப் புளுகு செல்லாத நாடு
வித்துவான் இல்லாத நாடு - ஏனெனில்
வித்தைகள் இல்லாத வெத்தாளு இல்லே.

• • • •

திக்கு எட்டிலும் விண்ணிலும் மண்ணிலும்
தேர் நடத்திய தசரத மன்னவன்
அக்கறை மிகுந்தா தரிக்கும் தந்தை
அன்னை போலவே தன்னில மக்களை

எக்கணந் தன்னிலும் மறவாமலே
இன்பமாகவே ஆதரித்தாண்டான்.

• • • •

சந்திரனுக்குத் தேய் பிறை யுண்டு
தசரதன் குடையோ தேயாது
இந்திரனுக்கோ எதிரிகள் உண்டு
இவனை வெல்பவர் கிடையாது
வானத்தில் பல மருவுண்டு - இவன்
மனத்தில் சிறிதும் மாசு இல்லை
ஞானத்தில் பெரு மாமுனி போலே
ஞாயத்தில் அவன் தாயாவான்.
ஒரு குடை நிழலில் உலகை ஆளும்
உத்தம தசரத மகராசன்
உப்புக் கடலைப் போலில்லை - இவன்
உள்ளங் கருணைக் கடலாகும்
காலும் வேலும் காய்ச்சுப் போச்சு
கருணை வீரம் இரண்டாலே
வேலில் வீழ்ந்த எதிரிகள் எல்லாம்
விண்ணுலகேகிக் கதி பெற்றார்
காலில் வீழ்ந்தவர் மணி முடி பட்டு அவர்
காலும் உரைகல்லாச்சுதுவே.

# திரு அவதாரம்

இந்தப் படிக்குத் தசரதனார் அரசு
இயற்றி வந்திடும் காலத்திலே

எப்படி பூமியில் அவதாரம் செய்ய
எம்பெருமான் உள்ளப் பாங்கெனவே
அப்போ நினைத்த வசிட்டரும் தன்னுடை
அருமைச் சீடன் தனை நோக்கி
ஈரேழுலகமும் ஏத்திடும் பிள்ளையை
இன்னும் சின்னாளில் நீ யடைவாய்



பாரோர் புகழ்ந்திடும் வேள்வியொன்று செய்து
பகவானருள் பெற வேணுமிப்போ
என்னவும் தசரத மன்னன் வசிட்டரை
தன்னிருகை கூப்பித் தண்டனிட்டு
மாசில்லா வேள்வி நடத்தி வந்தான் - அப்போ
மண்ணிலே தேவர்கள் வந்திறங்கி
பட்டமகிஷிகள் மூவரும் மன்னரும்
பட்டினி நோன்பு இருந்துகொண்டு
கட்டிய கங்கணத்தோ மாறாநாள்
கண்ணும் விழித்துக் கருத்துடனே
தானதருமம் தவமும் குறையாமல்
மோன நிலையிலே தாமிருந்து
ஆனதோர் புத்திர ஆசை பலித்திடும்
யாகத்தைச் செய்து வரும் காலம்.

தீயின் கொழுந்தினில் நெய் சொரிய அந்தத்
தீயில் ஒரு சுடர் வந்ததுபோல்
தீயின் நடுவிலிருந்தொரு பூதம்
திவ்யதேஜஸுடன் வந்ததுவே
கையிலோர் தங்கக் கலசத்திலே - நல்ல
கடலில் கடையாத அமுதெனவே
உய்யவைக்கும் அன்னம் ஏந்திவர - இதை
உண்ணச் செய்வாய் உந்தன் தேவியரை
என்னவும் தசரத மன்னவனார் - இதை
எல்லாத்திலு மேலாய் வாங்கிக் கொண்டு
தன்னுடை தாரங்கள் கோசலைக்குப் பாதி
தங்கியதில் பாதி சுமத்திரைக்கு
கால் பங்கு அருமைக் கைகேயிக்கூட்டி இன்னும்
கையிலிருந்திட்ட மீதியெல்லாம்
சுமத்திரைக் கையில் உண்ணச் செய்து
சுபதினம் பார்த்து அவர் இருந்தார்
காட்டுமரம் பூத்துக் காயாகும் - பல
காய்கள் பழுத்துக் கனியாகும்
நாட்டில் பல பல வீட்டினிலே - பிள்ளை
நாடிய பேரெண்ணம் ஈடேறும்
குவலயம் யாவும் வயிற்றில் வைத்தவன்
கோசலை யம்மன் உதரத்திலே

பாற்கடல் மீது படுத்துத் துயில்பவன்
பந்தம் பிருந்தவள் அவன் குடலில்
மாதம் பன்னிரண்டு கர்ப்பவாசம் செய்து
மாநிலம் வாழவும் மனிதர் சூழாம்
நீதி தெரிந்து நடப்பதற்கும் தானே
நின்று நடந்து அதைக் காட்டவந்தார்
மாதம் பன்னிரண்டு கர்ப்பத் தவஞ் செய்து
மானிடர் குணங்களில் ஊறிவிட்டு
ஆதவன் கோடி உதிப்பது போல் நம்மை
ஆளப் பிறந்தார் பரந்தாமன்.

சுமித்திரையம்மன் வயிற்றினிலே - மாலைச்
சுமந்திடும் சேடனும் பிறப்பெடுத்தான்
இமைப் பொழுதும் ஓய்வில்லாத சக்கரம்
இன்னொரு பிள்ளையாய்த் தான் பிறந்தார்
கேகயன் செல்விகை கேயியிடம் - மாலின்
தூய வெண்சங்கம் மதலையுமாய்
தேகமும் சீவனும் போல ஸ்ரீராமனைச்
சிந்தையில் கொண்டவர் தான் பிறந்தார்
ஆழிவண்ணனை ராமனென்றார்கள் - அந்த
அருமைக் கோசலை மைந்தனையே
ஆடகச் செம்பொன் நிறமுடையானை
ஆனந்தமாய் லக்ஷ்மணன் என்றார்
சுமத்திரை பெற்ற இருவருமே - தங்கள்
சோதார் ராமர் பரதனிடம்
இமைப் பொழுதும் பிரியாத வராகியே
இருந்தனர் எந்தக் கணத்திலுமே
தேவாதி தேவர் தொழுதேத்தி - அந்த
ஜகன்னாதன் புகழினைப் பாடிவர
கூவிடும் கோசலைத் தாலாட்டில் - அவர்
கொண்டார் உறக்கம் தொட்டிலிலே
அமுதத்தை அன்று பரிமாறி - அதில்
அவரொரு சொட்டையும் குடித்தறியார்
கோசலையம்மையின் கொங்கையமுதுக்குக்
கூப்பாடு போட்டுக் குடித்தாராம்
செந்தாமரைக் கண்ணன் ஸ்ரீராமச்சந்திரன்
சின்னக் குழந்தைப் பருவத்திலே



வந்த குடிகளைச் சந்தோஷமா? உங்கள்
யாழ்வு நன்றாக நடக்கின்றதா
யாதும் குறைகள் கிடையாதே - என
அன்புடன் ராகவன் கேட்பாராம்.
நாளும் பொழுதும் வளர்ந்துவர - பாலர்
நால்வரும் நன்கு வளர்ந்து வர
நாளும் பொழுதும் தன் பிள்ளை நினைவாக
நாடாளும் மன்னவன் தானிருக்க
அய்யன் ஸ்ரீராமரும் தம்பியரும் - நல்ல
அஸ்திர சஸ்திர வித்தை கற்று
ஆனை குதிரை நடத்தி வந்து - தங்கள்
அரசியலில் மெத்த வல்லவராய்
ஆண்டு பதினாறு ஆகிடவே - மெத்த
அன்னையுந் தந்தையு மானந்தமாய்
வேண்டுமிடங்களில் பெண்பார்த்து - அவர்
விவாஹம் நடத்த நினைத்தாராம்.

● ● ● ●

சந்தன தாம்பூலம் புஷ்பத்துடன் தசரதமன்னன் சபைதனிலே
மந்திரியான சுமந்திரரும் - வசிஷ்டர் வாமதேவருடன்
பிள்ளைக் கவிதீர்க்க வந்த வர்க்கு
பெருமான் ஆகும் ஸ்ரீராமருக்கு
கலியாணம் செய்யும் பேச்சினிலே
கலந்து யோசிக்கும் வேளையிலே
புலிபோல அங்கு நடந்து வந்த
புண்ணிய ரூபனைக் கோசிகனை
பண்டு படைத்த உலகத்துக்குப்
பதிலைப் படைத்த தவமுனியைக்
கண்ட தசரத மன்னவனும்
கோசிகர் முன் கரம் கூப்பிக்கொண்டு
சந்திரஹாரம் துடித் தெழும்ப
சகல திசைகள் ஒளிகள் மின்ன
இந்திரன் பிரம்மாவைக் கண்டு விட்டு
எழுந்து நின்றது போலே நின்று

வந்தனை செய்து வழிபட்டு
வந்த மகா முனி தன்னை நோக்கி
இந்த அடிமையின் வாசலிலே நீங்கள்
வந்தது பாக்கிய மென்று சொல்லி
நகரத்து மாந்தர் அமைப்பு மல்ல
நானே செய்த தவமுமல்ல
சகரர் முதலான மூதாதை செய்த
தவப் பயனாகவே வந்தீரே
என்று முகமன் இயம்பினபின்
இரண்டு கையாலும் பூவையள்ளி
நின்ற தவமுனி பாதத்திலே நீரும் மலரும் சொரிந்தேற்ற
பூசனை செய்து கனிவுடனே புத்திரரோடு நான் வாழ்கவென்று
ஆசி புரிந்திட வேண்டுமென்று - அந்த தசரதன் வேண்டிக்
கொண்டான்

என்ன கேட்டாலும் நான் செய்திடுவேன்
என்று தசரதன் இறைஞ்சிடவே - அப்போ
ஈரேழு லோகமும் போற்றும்முனி
என்ன ஐய முனி தேவருக் கெல்லாம்
உன்னையன்றிப் புகல் ஒருவருண்டோ

பனிவரை மீதில் பார்வதி நாதன்
பரமசிவனிடம் நாம் முறையிடுவோம்
பாற்கடல் துயிலும் பரந்தாமன் திருப்
பாதமலரிடத்தே பகர்ந்திடுவோம்
இனிய பதுமமலர் உறையும் நான் முகன்
இவர்களை விட்டால் இனி இவ்வுலகில்
தனிப் பெருங்கருணைக் கடலாய் விளங்கும்
தசரதனே உன் வாசலின்றி
வேறெங்கு செல்வோம் மன்னா - இந்தப்
பாரெங்கும் வாழச் செய்பவன் நீயே

தருநிழல் இருந்த இந்திரன் வந்து
தசரதன் குடைநிழல் சரண் புகுந்தான்
ஒருதரும் அடையா இந்திரப் பதவியை
உன்னருளால் அவன் திரும்ப அடைந்தான்
சம்பராசுரனைக் கொன்றாய் - அந்த
உம்பருக் கரசு நீ அளித்தாய்



நம்பி வந்தேனுன்னை இது போது என
நல்ல முனி புகழ்ந்து சொல்லவுமே.

சொல்ல வேண்டும் வந்த தென்ன இல்லையென்ன மாட்டேன்
சொன்னவாக்குத் தவறிடாத சூர்யவம்சம் நாங்கள்
ஏழை செல்வர் என்ற பேதம் இரவிபார்ப்ப தில்லை
எங்களுக்கும் குணமது தான் பேதம் பார்ப்பதில்லை.
கானகத்தில் நானொரு நல்வேள்வி செய்யுகின்றேன்
கல்மனத்து அரக்கர் இடையூறு செய்யுகின்றார்
சாபமிட்டால் எந்தனுக்குப் பாபம் வந்து சேரும்
கோபத்தாலே தவங்குறையும் கொள்கை ஈடேறாது
ஆறுகுணப் பகைவரைப் போல் அரக்கர் பகையானார்
ஆகுதியில் செய்விழுந்தால் அவர் பிரசன்னமாவார்
வேதமறை கேட்டுவிட்டால் விண்ணில் வந்து நின்று
பாதகமே செய்கின்றார் பார்க்கச் சகியாமல்
அசுரர்களின் குறும்படக்கி ஆன வேள்விக்காக்க - உன்
பசுமை நிறப் பாலகனைப் பரிந்தனுப்ப வேணும்
காகுத்தனை என் பிறகே காட்டுக்கு நீ அனுப்பி
காக்க வேண்டும் வேள்வி என்னைக் காத்திடவே வேண்டும்
தன்னுயிரை ஒருவன் வந்து தானம் கேட்டதுபோலே
தத்தளித்தார் தசரதனும் புத்ரபாசத்தாலே
எண்ணிலா தவமுனிவன் இயம்பியது கேட்டான்
புண்ணிலே நெருப்புச் சுட்டது போலே மன்னன் துடித்தான்
கண்ணிலாதான் பெற்றிழந்த கதையைப்போலே ஆச்சே
அண்ணலே நானிருக்க அவனைக் கேட்பதேனோ?

## (வேறு)

பால ரகு ராமன் - குழந்தை - படைபலம் தானறியான்
சீலமிகுத்தவரே - நான் வந்து - செயித்துத் தருகின்றேன்
பாலகன் வில்லெடுத்துப் போர் செய்து - பழக்கம் மெத்த இல்லை
ப்ராயம் பதினாறு தானே பச்சைப்புள்ளை ஸ்வாமி
ஆலத்தை அள்ளி உண்ட - அந்த நீலகண்டரேனும்
நீலமேகப் பெருமாள்தானே நேருக்கு வந்தாலும்
யாரெதிர் வந்தாலும் அடியேன் வந்து தவம் காப்பேன்
வாரும் புறப்படுவோம் இப்பவே மைந்தனைக் கேக்காதீர்

என்று உரைக்கவுமே முனிவன் எழுந்து முகம் கருத்தே
குன்று வெடிப்பது போல் முகத்தில் கோபம் வியர்த்திடவே
அன்று திரிபுரத்தைச் சிரித்தே அழித்த சிவன் போலே
நின்ற முனிவரையே பார்த்து நிலமும் நடுங்கிடவே

கருத்த மாமுனியே கோபத்தைப்
பொறுத்துக் கொள்ள வேண்டும்
உருத்திரன் போலே கண்ணால்
எரித்து விழிக்காதீர் - என்றே
வசிட்ட முனிவரப்போ அமர்த்தி
மன்னவரைப் பார்த்து
அதிட்டம் வருங்காலம் - அதற்கு
அணைகட்டலாமோ
கூடிவருங்காலம் - தந்தை நீ
கொஞ்சமும் அஞ்சாதே

மாநதியெல்லாம் கடலைத்தேடி வந்து கலந்திடும் அதுபோலே
மைந்தன் ராமன் பாதத்தில் புகழ்வந்து அடைந்திடும் காவழிது
எங்கு பிறந்தாலும் மழை வெள்ளம் சங்கமம்கடலில்தான்
எங்கு பிறந்தாலும் சங்கமம் இறைவன் காலடியில்தான்.

நல்ல முனிவர் பின்னே அனுப்பி விட
நன்மைகளுண்டாகும்
வல்லமை சேருமென - வசிட்டர்
சொல்லவும் தசரதனார்
அழைத்து வாருமென்றார் மைந்தரை
அனுப்பச் சம்மதித்தார்
மழைத்துளி போலே - வியர்வை
மன்னன் முகத்தில் வர

## இராம லக்ஷ்மணர்கள் வருதல்

இரகுராமர் வந்தாரே - கூடவே
லக்குமர் வந்தாரே
இடையில் உடைவாளும் - ஐயன்
நடையினில் கம்பீரம்



தோளில் அம்புத் துணி - சத்தியம்
தோற்கு மதில் நாணி
ஒரு வில்லைத் தாங்கி - அதனால்
உலகத்தைத் தாங்கும்
பெருவில்லி ராமன் - உலகத்தின்
பெருந்தவம் வந்தார்.

எங்கு இருந்தாலும் - இருட்டுக்
கங்குலில் கூட
தங்கு நிழல்போலே - அந்தத்
தம்பியும் தான் தொடர
தம்பியுமண்ணனுமாய் - தசரதர்
தன்னிடம் செலவு பெற்றார்
முன்னைத் தவத்தாலே பெற்ற
என்னுயிர் மைந்தர்களை
அன்னையும் தந்தையுமாய் நீரே
ஆதரித்திடுவீரே.

காட்டில் வசிக்கும் முனி - ராமனைக் கூட்டி வழி நடந்தார்
நாட்டில் நடந்தறியா பாலகர் ஓட்டம் நடையாக
ஆறு கடந்தார்கள் மலைமேல் ஏறி நடந்தார்கள்
ஊரு கடந்தார்கள் - உலகிடையூறு களைந்திடவே

கூட நடந்தார்கள் கோசிகனார் தன்னோடு
தேடக் கிடையாத திருமாலும் தம்பியரும்
படைபடைக்கும் கோடைவெயில் - பங்குனிக்குப் பின்னாலே
சித்திரைத் தென்றல் போல் ஸ்ரீராமசந்திரனும்
சித்திரையைப் பின் தொடரும் வைகாசி போலே அந்த
ஸ்ரீராமர் பின்னாலே சுமத்திரையின் புத்திரரும்
வீட்டில் நடந்தறியா வினைதீர்க்கும் எம்பெருமான்
காட்டில் நடந்து வந்தார் நங்கை யெல்லாம் பார்த்துவிட்டு
ஐயன் நடந்து செல்லும் அழகில் மதிமயங்கி
மைய நடவுமென்பார் பாலகரைப் பாருமென்பார்
ஐயா கவுசிகரே அன்பான இல்லறத்தைப்
பொய்யாய் மதித்தவர்க்குப் புள்ளை அருமையுண்டோ
தாமரைப்பூ மிதித்தால் தாங்காத சிறுபாதம்
மாமுனிவன் பின்னாலே வலியெடுக்க நடக்கையிலே

வருணனும் ஓடிவந்து மாரிமழை பொழிந்தான்
பனி நீர் தெளிப்பது போல் பாதையிலே நீர் தெளித்தான்.
வாயுபகவானு மங்கே மரமெல்லாம் ஏறிநின்று
பூத்தமலர் உலுப்பிப் போட்டாராம் பாதையெல்லாம்
வானவில் தானெழும்பி வண்ண வண்ணத் தோரணமாய்
ஆகாய வீதியெல்லாம் அல்மானகிரி கட்ட
தென்னலும் வந்து அந்த ஸ்ரீராமர் மேனியில் மேல்
தீண்டப் பயந்துகிட்டு சிறு காற்று வீசிவர
தன்னினத்தில் வந்தவர்கள் தன்மேலே காந்தாமல்
பொன்னு வெயில் காய்ந்தாராம் புவி சாக்ஷி சூரியனும்
மஞ்சள் வெயில் காய்ந்து மஞ்சள் நன்னீராட்டி
அஞ்சன மேனிப்பெருமாள் அங்கமெல்லாம் குளிரவைக்க
மானம் மனங்கலங்கி வருத்தம் சகியாமல்
தானும் கருத்ததுவாம் தவசிகுணம் பார்த்து
சுந்தரப் பூம்பாதம் சுடச்சுட நடந்தீரே
செந்தாமரைப் பாதம் செக்கச் சிவந்திடவே
காகுத்தன் பாதக் கமலம் சிவந்திடவே
கமல மலர்களெல்லாம் கன்னிப்போய்க் குவிந்தனவாம்
நீலோத்பலம் போலே பாலர் நடந்து வர
நீரில் இருந்த அல்லி நிமிர்ந்ததாம் இதழ் விரித்து
தாரக நாமப் பொருளை தரிசிக்கும் ஆவலுடன்
தாரகைகள் கோடி லக்ஷம் தான் வந்து கண் சிமிட்ட
பாலைப் பொழிந்த வண்ணம் பவுர்ணிமைச் சந்திரனும்
நீலமுகில் மேனிதனை நிலவாலே நீராட்ட
சரயுநதி வெள்ளமது தான் பாற்கடலாகி
கரைபுரள அலையடித்துக் களிப்புடனே துள்ளிவர
ஆலம் பழுப்பாலே அமைத்த படுக்கையிலே
பாலரகுராமர் பள்ளி கொண்டாரப்போது
சமித்துப் பொறுகுவதில் சமத்தான கோசிகனார்
தவத்தின் பயனை யெல்லாம் தரைமேலே பெற்றவராய்
அமைத்து வைத்த தர்ப்பத்திலே அரிதுயில் செய்யும் பெருமாள்
தமைத்தானே பார்த்துக்கிட்டு இமைக்காமல் இருந்து வந்தார்.
காட்டு மரமுறங்க கரடி புலி தானுறங்க
ஓட்ட முடைய நதி ஓடைகளும் தானுறங்க
யாகம் நடத்துவதில் அக்கரையைத் தான் செலுத்தி
யோகமுனி மட்டுமப்போ உறங்காமல் விழித்திருக்க
பின்னிலவு நன்னேரம் வெண்ணிலவுபால் போலே



கண்ணிறைந்த காக்ஷி ஒன்றைக் கண்டுவிட்டார் கோசிகனார்
ஆரைக் குறித்து இந்த யாகத்தை நடத்துகிறோம்
அவனே இராகவனாய் அவதரித்தான் என்றறிந்து
பால் நிலவில் பாயலிலே படுத்திருக்கும் பாலகனை
பாற்கடலில் பாம்பணைமேல் பள்ளிகொண்ட பெருமானாய்
பார்த்தந்த கோசிகனார் பஞ்சேந்திரியம் ஒடுங்கி
வேர்த்து விறுவிறுத்து மெய்ஞானம் தடுமாறி
மாலென்று கண்டுவிட்டார் மனத்தைப் பறிகொடுத்தார்
கையை உயர்த்துகிறார் கண்ணீர் பெருக்குகிறார்
மெய்யைச் சிலிர்ப்புகிறார் வேதத்தைச் சொல்லுகிறார்
தன்னை மறந்து அந்தத் தாசரதி முகம்நோக்கி
கண்ணை எடுக்காமல் கண்டபடி நின்றுவிட
செந்தாமரைபோலே சிவந்தது வானமப்போ
வந்தார் கதிரவனும் வண்ணக் கதிர்பரப்பி
பூமலர்ந்து புள்ளெழுந்து புனலும் சலசலத்து
தேமதுரக் கீதமெல்லாம் தேன்வண்டு பாடவுமே
முதுகிலே வெயில் பட்டு முனிவர் உணர்வு பெற்று
அதிகாலை ஆச்சு தென்று ஆதவனார் வரவு கண்டு
சந்தி ஜபம் மறந்து தன்மயமாய் நின்ற முனி
அந்தப் பொழுதினிலே அடக்கினார்தன் மனத்தை
எடுத்த பிறவிக் கேற்றபடி தான் நடிக்கும்
இராகவரைத் துயில் நீக்கி எழுப்புகிறார் மாமுனிவர்
கோசலைக்கு வாய்த்தவனே கண்மணியே இராகவனே
மாசற்ற ஆதவனும் வந்துதித்தான் கண்திறவாய்
மனிதர் குலம் விளங்க வந்தவனே ஸ்ரீராமா
இனிதான அனுட்டானம் ஏற்றபடி செய்திடுவோம்
என்றே துயில் நீங்கி இருவருமே சந்தி செய்து
சென்றார்கள் பாதைவழி திருமாலும் துறவியுமே

பாலை வனத்திலே சுடுமண்ணிலே பாலர் நடக்கையிலே
சோலைப் பசுங்கிளிகள் சுடச்சுட காலை எடுத்துவைக்க
வேலும் பழக்குதங்கே கோதண்டநாணும் முறுக்கேறி
பாலரகுராமன் மேனியும் பழுத்து சிவக்குதங்கே
பாற்கடல் நாயகனும் பார்த்தான் பாலைவனம் ஏனோ
பாரில் அறம் குறைந்தே நாட்டில் பசுமை குறைந்ததுவோ
பாவங்கள் யாவையுமே கூடி ஒரு பாவையின் உருவத்தில்
வந்ததைப் போலே

தாபங்கள் உருவான அரக்கி அந்தத்தாடகை வலமிது
தசரதராமா

பூமி பிளந்தாலும் கடல் பொங்கி யழிந்தாலும்
வானம் இடிந்தாலும் அவளுக்கு வரவுசிலவில்லை
காக்கும் திருமாலே நீ காக்கும் உயிர்களெல்லாம் - அவள்
நாக்கு ருசிக்கெனவே நினைக்கும் நாட்டமுடையவளாம்
என்னத்தைச் சொல்லிடுவேன் ராமா இன்னும் சிலநாளில்
உன்னையும் என்னையுமே கூட உண்டு வயிற்றில் வைப்பாள்
உலகை வயிற்றில் வைத்த பெருமாள் அலகையவள் வயிற்றில்
இலகி இருப்பாரோ இருந்தால் இராகவராவாரோ
எங்கு இருக்கின்றாள் அரக்கி இந்த கொடுமையுண்டோ என
சிங்கம் தலையசைத்தே கோதண்ட சங்கநாதம் செய்தான்
இந்த மலைதானே அவளுக்கு இருப்பிடமென்று முன்னே
வந்து குதித்தாளே தாடகை வாயைப் பிளந்துக்கிட்டு.

(வேறு)

கருத்த மலை மேலே - நெருப்பைக்
கக்கிய பாவனைபோல்
பெருத்த உடம்புடனே - வாயைப்
பிளந்து கொண்டு வந்தாள்
செம்பட்டை மயிரழகி - தீபோல்
செக்கச் சிவந்த கண்ணி
சிங்கப் பல்லுக்காரி - வாயொரு
சிங்கக் குகை போலே.

அம்பிட்ட சீவனெல்லாம் - முழுங்கியும் அடங்காப் பசியுடனே
எம்பி எம்பிக் குதித்தாள் - உறுமி - எரைச்சலும் போட்டு
வந்தாள்
பல்லைக் கடித்தாளாம் - பாறாங்கல்லை உருட்டுதல்போல்
கல்லையும் எத்திவிட்டாள் - எதிரிகள் இல்லை என்று நினைத்தாள்
பாலை வனமாச்சே தாடகை பசிக்கு இல்லை யென்றே
காலனுமைத்தாலே - எனக்காகாரமாய்த் தந்தாரோ
மேகம் ஒன்றைப் பிரிந்து - குடித்துத் தாகம் தணிப்பவள்போல்
வேகத்துடனே வந்தாள் - வீரராகவன் தன்னிடமே
ஆவென வாய்பிளந்தாள் - ராமனை அள்ளி விழுங்க வந்தாள்
தேவர் தொழுதேத்தும் திருமால் சிந்தனை செய்து நின்றார்



உள்ளும் உயிர் குடிக்கும் வில்லை உயர்த்தி வந்தாலும்
பெண்ணின் உருவமதைக் கொல்லப் பிரியப்பட வில்லையாம்
பெண்ணென்று பாராதே ராமா பேயிலும்வள் பெரும்பேய்
என்னையும் தின்றிருப்பாள் - சக்கை யென்பதனாலே விட்டாள்
கோபத்தில் சொல்லவில்லை - அரக்கியின் கொடுமைகண்டு
சொன்னேன்
பாபம் பழியுமில்லை - இவளைப் பாவை யென்றெண்ணாதே.

என்று விசுவாமித்திரர் - தருமம்
எடுத்துச் சொல்லும்போது
குன்று போலே நின்று - தாடகை
கோபத்துடன் தாவி
சூலத்தை விட்டெறிந்தாள் - பற்பல
துண்டுகளாச்சு தங்கே
வாளி தொடுத்ததையும் - வில்லை
வளைத்து விட்டதையும்
கண்டவர் யாருமில்லை - சூலம்
துண்டு துண்டாகக் கண்டார்
சூலம் ஒடிந்த பின்னே - அவளைக்
காலன் பிடித்துத் தள்ள
பால ரகு ராமன் மேலே
பாய்ந்து விழுந்தாளாம்
கல்லை எடுத் தெறிந்தாள் - அய்யன்
வில்லை எடுத்துவிட்டார்

பொல்லாதவர் நெஞ்சில் நல்லவர் சொல்புத்தி
புகுந்து புறப்படல் போல்
பொல்லாத தாடகை மார்பில் ராமபாணம்
புகுந்து புறப்பட்டதே
வாக்குப் புறப்படும் வேகத்திலே - அம்பு
தாக்க விட்டார் பெருமான் - கம்பர்
வாக்கு பதியாத தமிழன் செவிதனிலே
நாற்கவி சொன்னது போல்

• • • •

யாகத்தைத் தான் நடத்த அமர்ந்தார்கள் மகரிஷிகள்
மேகவர்ணப் பெருமான் வில்லைப் பிடித்து நின்றார்

ஓமகுண்டம் முன்னாலே உட்கார்ந்தார் கோசிகனார்
சாமமும் ரிக்கும் சாற்றினார் தவசியெல்லாம்.

காவல் காக்குராறாம் - பெருமான் - காவல் காக்குராறாம்
மண்ணைக் காக்கும் மன்னவராகி
கண்ணைக் காக்கும் இமையைப் போலே

மேலிமை போலே அண்ணன் ராகவன்
வேள்விச்சாலையைச் சுற்றிவர
கீழிமை போலே தம்பி லக்ஷ்மணன்
கேட்டு வாசலில் நின்றிருக்க

மானம் குமுறி இடித்தது போலே வந்தார் ராக்ஷதக்
கூட்டமெல்லாம்
ஆவேசத்துடன்வில்லை வளைத்து அடித்தார் ராகவன் தூள்
தூளாய்
நெய்யை எடுத்துப் பெய்திடும்போது பெய்தார் மாமிச
மலஜலங்கள்
அய்யன் ராமன் கையை யசைத்தான் அம்புக் கொட்டில்
ஆச்சுதுவாம்
தம்பி லக்ஷ்மணா வேடிக்கைபாரு தாவிக்குதிக்கிறார்
பாரென்றான்
அண்ணா நீ இதோ ஆளை எண்ணிக்கொள் அம்பு
மழையினைப் பார் என்றான்.
தாடகை பெத்த கோடாரிக்காம்பு தம்பியுமண்ணன் இரண்டு பேர்
மாரீசன் சுபாஹு என்பார்கள் மானத்தின் மேலே வந்தார்கள்
ராமபாணத்தில் சுபாஹு யமதர்மராஜன் பட்டணம் போய்ச்
சேர்ந்தான்
ராவணனுக்கு உலையிடவே மாரீசன் கடலில் வீழ்ந்தானே
தேவர்களெல்லாம் பூமழை பெய்தார் திருமகள் நாயகன் ராமன்மேல்
காவல்காத்த பெருமாள் தன்மேல் காட்டுமரங்களும் பூச்சொரிய

யாகத்தைத்தான் முடித்து அவபிருத நீராடி
வேகமாய் ஓடிவந்த விஸ்வாமித்திரர் முனிவர்
புண்ணியத்தால் வந்தவனே புண்ணியத்தைத் தந்தவனே
என் வேள்வி காத்தவனே இரகுராமா என்று சொல்லி



தன்னுடைய வித்தை யெல்லாம் தவத்தில் கிடைத்ததெல்லாம
அஸ்திரமும் ஸஸ்திரமும் அரிதான வில்வித்தை
அத்தனையும் ராமருக்குத் தத்தமென்றே நீர் வார்த்து
பக்தியிலே நின்றுவிட்டார் பாரைப் படைத்த முனி
என் வேள்வி காத்ததுபோல் இன்னொருத்தர் வேள்வியதும்
கண்மணியே நீ வந்து காப்பாற்றித்தர வேணுமென்று
மிதிலா நகரத்திலே வேதாந்தி ஜனகரிடம்
வில்லொன்று இருக்குதப்பா மினிர்கொன்றைச் சிவன் வில்லு
வீரா நீ பார்த்து வந்தால் மேதினிக்கு நல்லதென்று
மிதிலா நகர்க்கேக மின்னடந்தார் கோசிகனார்.

# அகலிகை சாபவிமோசனம்

யாகத்தைக் காப்பாற்றி அமரர் குடி வாழவைத்த
ராகவப் பெருமாளும் கூட அவர் தம்பியரும்
எந்நேரம் பார்த்தாலும் இரட்டை பிறந்தவர்போல்
அண்ணனைப் பிரியாத அன்புடைய லக்ஷ்மணரும்
பாலைப் பழித்த குணம் பச்சைமேனிப் பெருமான்
சோலை வனந்தனிலே சொகுசாய் நடந்துவர
கோபம் தொழிலான குணக்கேடர் கோசிகனும்
சாபம் விலகினாப்போல் சந்தோஷமாய் நடக்க
கதறும் பசுவை விட்டுக் கன்றைப் பிரித்ததுபோல்
பதறும் தசரதனார் பாலகரைப் பிரித்த மகான்
அப்பனுக்கும் பிள்ளைக்கும் அன்பில் இடையூறாய்
சர்ப்பனை போல் ராகவனைத் தனிவழியாய் இழுத்தமகான்
கம்பளத்தை மிதித்தறியா கமலப்பூப் பாதங்கள்
கல்மேலும் முள்மேலும் கனல்போலப் பாலையிலும்
நடையாய் நடந்துவர நாட்டைவிட்டுக் காட்டுக்குள்ளே
கிடையோட்டி வந்த அந்த கிழவராம் கோசிகரும்
நாட்டைவிடச் செய்த மகான் காட்டுக் கழைத்த மகான்
நடைபழகித் தந்த மகான் நற்குருவாய் வந்த மகான்
பழுப்பில் படுத்தறிய பர்ணசாலை தான் அறிய
படைப் படைக்கும் வெயிலிலே பாதையில் நடந்தறிய
தன்சுகமெலாம் மறந்து தவசியரைப் போல் வாழ

மிஞ்சிவரும் அரக்கரின்மேல் வீரமுடன் அம்பெய்ய
ஈனவாகிப் பின்னடக்கும் காரியத்தைச் சொல்வதிலே
வனவாசமின்ன தென்று வழிகாட்ட வந்த மகான்
ராமபிரான் வந்துவிட்டார் பூமி நல்லா வாழுமென்பார்
தீமை விலகிவிடும் செல்வம் செழிக்குமென்பார்
தாம் செய்த புண்ணியங்கள் தனக்குப் பலித்ததென்றும்
பாடுபட்டுச் செய்த தவம் பலித்துவிட்ட தென்பாராம்
தேடிப்போம் தெய்வம் வந்து தெரிசனம் தந்த தென்பார்
சந்தோசம் தாங்காமல் தாசரதி தன் முன்னே
வழிகாட்டிப் போவது போல் வருவாராம் முன்னாலே
விழிக்கடையால் ஸ்ரீராமர் மின்னழகைப் பார்ப்பாராம்
பாலகரை முன்னேவிட்டுப் பார்ப்பாராம் பின்னழகை

இளைய பெருமாளும் கிழவருக்கு நேசம் ரொம்ப
பழைய கதையெல்லாம் பாட்டனார் சொல்வாராம்
கேட்டுச் சிரிக்கையிலே கிழவர் அந்தக் கோசிகனார்
புன்முறுவல் ராமபிரான் பூக்குறதைப் பார்ப்பாராம்
குனிஞ்ச தலை நிமிராமல் கோதண்ட ராமனையே
கனிஞ்சுவரும் மனசோடே கண்கலங்கிப் பார்ப்பாராம்
நீலமணிபோலே நெடுமால் தன் திருமேனி
பால்வடியும் திருமுகமும் பார்த்தே மகிழ்வாராம்
கொண்டை சுருளழகும் குறுவேர்வு நெற்றியிலும்
கெண்டைச் விழியழகும் காலழகும் பார்ப்பாராம்
கோதண்ட வில்மணிகள் குலுகுலுத்திசை பாட
குஞ்சரம்போல் ராமபிரான் குலுங்கி நடந்துவர
அஞ்சுவிரலழகும் ஆழியும் சங்கமுமாய்
செஞ்சரணமலர்த் தடங்கள் ஸ்ரீராமர் பாதங்கள்
எழுதி வச்ச சித்திரம்போல் இருதாளும் தவவனத்துப்
புழுதியில் படிந்திருக்கும் பொலிவுகண்டு மாமுனியும்
அய்யன் திருவடிகள் அடித் தடத்தைப் பார்த்துவிட்டு
கையில் இருந்த தண்டம் கைநழுவ விட்டுவிட்டு
தண்டம் தனையெடுக்க தலை குனிஞ்ச பாவனைபோல்
தண்டமிட்டுச் சேவிப்பார் தாசரதி பாதமலர்
ஊழி உலகமெல்லாம் உயிர் காக்கும் எம்பெருமான்
ஆழித்துயில் நீங்கி அன்பருக்காளாகி
காட்டு வழி நடந்து கைகட்டி சேவகன் போல்



வாட்டம் சிறிதுமின்றி வழிநடக்கக் கண்டுவிட்டு
நல்லவழி கெட்டவழி நானிலத்தில் தான் நடத்தும்
வல்லவன் அவனாலே வழிகாட்டும் சோதி அவன்
அந்தப் பெருமாளும் அவர் படுக்கும் சேடனுமே
இந்தக் கிழவன் பின்னே இவன் காட்டும் பாதையிலே
நடந்துவரக் கிடைத்தால் நன்மை இது போலுண்டா
யாருக்குத்தான் கிடைக்கும் இந்த நல்ல பாக்கியங்கள்
என்ன தவம் செய்து எடுத்தேன் பிறவி என்றே
கண்ணம் இரண்டிலுமே கண்ணீர் வழிந்தோட
காக்கும் திருமாலே கைகொடுக்கும் நாயகமே
பார்க்கு மிடந்தோறும் பந்துவாய் நிற்பவனே
அய்யா சரணமென்று அகமெல்லாம் பக்தியுடன்
பொய்யாய் நடந்துவந்தார் பூமிபுகழ் கோசிகனார்.
அந்த நல்ல வேளையிலே அடிசுட்ட பாலை வனம்
மந்த மாருதம் வீசும் மருதநில மானதுவே
பாலைவனம் கடந்து பசும்புல் படுகையிலே
சோலை வனத்தினிலே நடந்தார்கள் மூவருமே.

## (வேறு)

பட்டு விரித்ததுபோல் பசும்புல் நடைபாதை
பவழத்தால் கோலமிட்ட பாவனைபோல் சிறுபூக்கள்
சீட்டுக்குருவி யெல்லாம் ஸ்ரீராமா என்று சொல்லி
வட்டமிட்டு வட்டமிட்டு வரவேற்று பாடிவரும்
கொன்னைமரம் பூத்துக் குலுங்கிவிடும் பெருமூச்சு
புன்னைமரம் கண்ணரும்பி பொலபொலவென்றே யுதிர்க்கும்
முல்லையும் மல்லிகையும் மொட்டுக்கட்டிப் பூக்காமல்
அரும்பு அரும்பாக அலராமல் நிற்பதையும்
சோடிப் புறாக்களெல்லாம் கூடிவிளையாடாமல்
பாடம் படிப்பதுபோல் பஞ்சாதி சொல்வதையும்
கொஞ்சும் கிளிகளெல்லாம் அஞ்சி அஞ்சி பார்ப்பதையும்
பஞ்சாக்ஷரம் சொல்லி பகவானைப் பாடுவதும்
பாடும் குயிலினங்கள் பாடாமல் பஞ்சமத்தில்
வீடுதரும் பொருளாம் விஷ்ணுவின் பேர் சொல்லுறதும்
ஆனந்தக் கூத்தாடும் அழகான நீலமயில்
வானத்தனைப் பார்த்து வருந்தித் தவம் செய்கிறதும்

சோலை போலிருந்தாலும் பாடசாலை போலிருக்கும்
விலை இதைப்பார்த்து நீலவண்ணன் தான் நடக்க
ஆச்சரியமத்தனைக்கும் அற்புதமாய் அற்புதமாய்
பாதை அருகினிலே பாறாங்கல் ஒன்று நிற்க
இருபுறமும் நஞ்சையிலே எல்லைக்கல் நட்டதுபோல்
பச்சை வயலிடையே பாகக்கல் நட்டதுபோல்
சோலையதன் நடுவே சுமைதாங்கி நிற்பதுபோல்
மாலை நடுவினிலே மருவிட்ட பாவனைபோல்
குத்துக்கல் ஒன்று அங்கே குறுக்காக நிற்கையிலே
அத்தன் ராமபிரா னதனருகே நடந்துவர
பெருமூச்சு விட்டதுபோல் பெருங்காற்று ஒன்றடிக்க
பெருமாளின் கால்தூசி பெரும்பாறை மேல்விழவே

காலடித் தூசியிலே அங்கிருந்த
கல்லும் பெண்ணாகியதே
மாலடித் தூசியிலே - கருங்கல்
மங்கையுருவாச்சே
திருவடிப் பொடிதன்னிலே - அவர் செய்த
தீமை பொடியாச்சே
சீரடிப்புழுதியிலே - அவளுக்குச்
சீரும் வரலாச்சே
கல்லும் பெண்ணாகியதாம் - காட்டில்
மல்லி மலர்ந்ததுவாம்
முல்லையும் பூத்ததுவாம் - குயில்கள்
மோகனம் பாடியதாம்
சட்டாம்பிள்ளையிடம் - மாணவர்
கட்டுண்டிருந்த தெல்லாம்
கட்டியிருந்த தெல்லாம் இப்போது
விட்டு விடுதலையாம்.

வங்குசம் ஈடேற வென்று கங்கை கொண்டு வந்த மன்னன்
தங்குலத்தில் வந்த ரகு ராமா - இந்த
மங்கை நான் ஈடேற வென்று
பங்கயம் பூம் பாதம் நோக
இங்கு நீ நடந்ததென்ன - பரந்தாமா
தேவராசன் தொட்டதாலே பாவைநானும் பாறையானேன்



ஆவிசோர்ந்து வாடிநின்றேன் ரகுராமா
தேவதேவன் தொட்டதாலே பாறைநானும் பாவையாகி
ஆவிபெற்று வந்து நின்றேன் - பரந்தாமா
ஈசனிந்த ராமனென்று மாசில்லாமல் தானறிந்தும்
கூசிக் கூசிப் பேசுகின்றாள் குலமாது
தேகபெற்று வந்த பின்னும் சிந்தையில் துயரமிஞ்சி
கூசிநிற்கும் குலக் கொடியைக் கண்டபோது

அன்னையிவள் கல்லுருவாய் ஆனதென்ன ஸ்வாமி
அகலிகையாம் கோதமனார் மனைவியிவள் ராமா
சின்னமதி கொண்ட அந்த தேவராசன் செய்த
தீவினையினாலே இந்தத் தேவி கெட்டுப் போனாள்
என்ன இது உலகியலே இந்தவாறும் உண்டோ
அன்னையிவள் கதையை நன்கு அறிய வேண்டும் ஸ்வாமி
மங்கையிவள் அழகிலிந்த்ரன் மதிமயங்கிப் போனான்
மையலிலே கண்ணிழந்து தையலிவளை நாடி
பாதி நடுச்சாமத்திலே பர்ணசாலை வந்து
கோதமனார் தமையேமாற்றக் கோழிபோலக் கூவி
தேவராசன் காமத்தாலே சேவலைப் போல்கூவ
ஆவலுடன் முனிவர் கங்கையாடத் தேடிப் போனார்
இந்திரனும் முனிவர் போலே தந்திரமாய் மாறி
வந்து இவள் தன்னுடனே கலந்திருக்கும் வேளை
மங்கையிவள் மனத்தில் சிறு சங்கையும் உண்டாச்சு
இங்கிது போலிருக்கையிலே கங்கை தூங்குதென்றே
கோதமனும் திரும்பி வந்து குடிசையில் நுழைந்தார்
மாதுடனே வாசவனும் மருவி நிற்றல் கண்டார்
சத்தியமே உருவெடுத்த உத்தமனாம் முனிவர்
புத்தியை இழந்த பெண்ணே போகல்லாக என்றார்
சிந்தை கெட்டால் சிறு பிறப்பு வந்திடுமென்பது போல்
இந்திரனும் பயந்து பூனை உருவெடுத்துக் கொண்டான்
இந்திரனுக் காயிரம் புண் ஏற்படுக வென்றே
நொந்து வந்த சிந்தையினால் சாபமொன்று தந்தார்
பாபம் செய்த மனைவியுமே பணிந்து தண்டமிட்வே
கோபமது கரைந்தோடக்கோதமனும் சொல்வான்
கல்லாகக் கிடந்து பலகாலம் சென்று பின்னே
நல்லவர் கால் தூசி பட்டு நங்கையாக ஆவாய்

என்று அந்த முனிவர் சொன்னதின்று கண்கூடாக்க
நன்று வந்து பலித்ததென நல்முனிவர் கூற
சிந்தையிலே துயரமுற்ற செல்வன் ரகுராமன்
இந்த மாதைக் கோதமனார் ஏற்றுக் கொள்ளுவாரோ
என்று அந்தக் கோதமனார் இருக்குமிடம் செல்ல
நன்று வந்த தென்றுமுனி நல்முகமன் சொல்ல
அஞ்சனமேனிப் பெருமான் கஞ்சமலர்த்தாளால்
வஞ்சியிவள் பெண்ணுருவாய் மறுபிறப்பு உற்றாள்
நெஞ்சினிலே பிழையறியாள் வஞ்சகனாள் கெட்டாள்
நீயிவளை ஏற்வேணும் நீதி இது எனவே
கோசிகனார் தாமுரைக்கக் கோதமனார் ஏற்றார்
குணக்கடலாய் ஆனவர்கள் கோபம் பார்ப்பதுண்டோ

(வேறு)

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இவ்வுலக மாந்தர்
உய்வண்ணம் ஆகும் குணம் உயரும் வண்ணம் செய்யும்
மைவண்ணத் தாடகையை மாய்த்த மழைவண்ணா
கைவண்ண மங்கு கண்டேன் கால்வண்ணமிங்கே
என்று முனி புகழ்ந்துரைக்க இராமலக்ஷ்மணர்கள்
அன்று பகல் வழி நடந்து மிதிலை நகருற்றார்.

## மிதிலை

செந்தாமரை தேவி வந்தாள் எம்மூரில்
ஸ்ரீராமசந்திரா மாலையிட வாரும்
மாலையிடவாரும் என மலர்ந்த பூங்கொம்பு
மதில் மேலே நின்று வரவேற்கும் மிதிலை.

பேரொளி வீசும் தவக்கடலும் - அவர்
பின்னே இரண்டு குணக்கடலும்
சந்திர சூரியர் போலான - இரு
சதுரரும் கூடவருவதென்ன?
பிள்ளையழகினைப் பாருங்கடி - இவரைப்
பெத்தவர் பாக்கியசாலியடி - அவர்



கொள்ளை கொள்ளும் அவர் கொண்டை அழகையும்
கோதண்ட வில்லையும் பாருங்கடி.

முல்லைப் பூப்போல தலை வெளுத்த - அந்த
முனிவர் பின்னே அவர் வாரதென்ன.
முப்புரி நூலும் கிடக்குதடி - வாயில் - முல்லைச் சிரிப்புத்
தெரியுதடி
கப்பரை ஏந்தும் முனிவரில்லை - அவர் - கண்ணிலே
தீட்டிய மையிருக்கு
அண்ணனும தம்பியுமில்லையடி - இரண்டும் - அச்சிலே
வார்த்த உருவமடி
வண்ணத்தில் நீலம் ஒருவனடி - அந்த மற்றவன்
பொன்னிறமானவண்டி
தவத்தில் கிடைத்த அழகல்லடி இது - தாய் தகப்பன் செய்த
புண்ணியமண்டி
தாளில் புழுதி படிந்ததடி - இந்தத் தவசிக்கிரக்கமே
இல்லையடி.
என்று அந்த மாதரெல்லாம் - இருவரையும் பார்த்தே
ஒன்று பத்து ஆயிரமாய் - உணர்விழந்து பேச
முனிவருடன் இருவருமே - கனிவுடனே செல்ல

தனித்தங்க மலை யெனவே - ஜனகராரன் மனையில்
பொன்னிறமாய் மின்னுகிற கன்னி மாடத் தருகே
அன்னை சீதை நின்றிருக்கும் அழகை என்ன சொல்வேன்
பொன் ஒளியோ பூமணமோ பொங்கி வரும் பாட்டோ
இன்னமுதோ அழகையெல்லாம் எடுத்துச் செய்த உருவோ
கன்னியர்கள் சூழவரும் கமலையெனத் தானே
அன்னையவள் சானகியும் அங்கு நிற்கக் கண்டார்
கல்லுரும் புல்லுருகும் கன்னியவளழகில்
கண்டவர்கள் நெஞ்சுருகித் தெண்டனிடும் அழகு
கொல்லு தொழில் வேலையுமே வெல்லும் விழிமாது
சொல்ல முடியாது அவள் நல்லழகைத்தானே
அன்னல் அவள் முகம் நோக்க அவள் அவரைப் பார்க்க
கண்ணோடு கண்ணோக்கொக்க கருத்து ஒன்றிப்போக
பெருங்கடலில் பாம்பணைமேல் நெருங்கிப் பள்ளிகொண்டு
பிரிந்தவர்கள் கூடிவிட்டால் பேச்சுவேறு உண்டோ
சிந்தை இரண்டும் ஒன்றாய்க் கலந்து அந்தரங்கம் பேச

ஸ்ரீராமசந்திரனும் வந்தவழி போக
அந்தரங்கம் தனை எடுத்து அவன்வழியே போகும்
சுந்தரனைப் பார்த்தபடி சொக்கியவள் நின்றாள்
பாலுக்கு உரைமோராய்ப் பார்த்ததிந்தப் பார்வை
நூலுக்கு அடிகோலும் நோக்கமிந்த நோக்கம்
காச்சி வச்சபால் போலே களங்கமில்லாச்சீதை
கருத்தினிலே உரைமோராய் கலந்த தய்யா காதல்
வெங்கனலில் எரி நெருப்பில் விறகெடுத்துப் போட்டதுபோல்
அங்கமிலா மன்மதனும் அம்பு ஒன்றை எய்ய
பச்சைமணிக் குன்றனையான் பார்வையிலோ காமனோ
வச்சிருந்த வில் கரும்போ வந்த வனார்தானோ
நான் பிறந்த 'போதிருந்த நல்லறிவைக் காணோம்
நாணத்தையும் பறித்தலவோ நடந்துவிட்டான் கள்வன்
நடையழகில் நான் மயங்கி இடைதுவண்டபோது
கடைவழியில் நுழைந்த எந்தன் கருத்தைக் கொள்ளையிட்டான்
சுருண்ட குழல் மதிவதனம் சுந்தரத்தோள் அல்ல
புன்முறுவல் கண்டு அல்லோ புத்தியை நான் வித்தேன்.

## (வேறு)

தோளைக் கண்டு மயங்க வில்லையாம் - தாமரைப்பூந்
        தாளைக் கண்டு மயங்க வில்லையாம்
நீலக் கல்லைப் போன்ற மேனியும் - அய்யன்
        நெற்றிமீது சுருண்ட குஞ்சியும்
பாலைப் போல இருந்த முகத்தையும் - சீதை
        பார்த்து மயங்கிப் போகவில்லையாம்
ஆணைபோல நடந்த அழகிற்கும் - அய்யன்
        ஆனந்தமாய் சிரித்த சிரிப்புக்கும்
தானே சீதை மயங்கிப் போனாளாம் - அந்தத்
        தாசரதிக் கடிமையானாளாம்
இன்னொருதரம் அவரைப் பார்த்து விட்டு - அடியே
        இந்த உயிரை விட்டாலும் போதும்
கன்னி எந்தன் உள்ளக் கோட்டையை - அவன்
        காலாலெத்தி உடைச்சுப் போட்டுட்டான்
அந்தி மாலை இருளைப் பார்த்துட்டு - அந்த
        சுந்தராங்கன் கிறமிதென்பானாம்



மையிருட்டைப் பார்க்கப் பார்க்கவே - அந்த
        மழை நிறத்தோன் மையல் பெருகுதாம்
தீக்க மற்றெங்கும் நிறைந்த நிலாவுந்தான்
        தாக்குதாம் தாக்குதாம் தணல் போலே தாக்குதாம்
வசமுள்ள சந்தனம் பூசுவர் தோழியர்
        பூசிடப் பூசிடப் பொடியாக உதிருதாம்
விளாமிச்ச வேராலே வீசுவார் விசிறுவார்
        வீசிட வீசிட வெம்புவாள் சீதையும்
ஆசை நோய் தீர்க்கவும் மருந்தில்லை என்பது
        அப்ப நிசமாச்சுதாம் அப்ப நிசமாச்சுதாம்.

ஸ்ரீராமசந்திரன் சிந்தையும் இப்படி
ஆராத காதலில் அகப்பட்டுத் துடிக்குதாம்
தம்பியும் முனிவரும் நடந்திட்ட கால்வலி
தாளாமல் தூங்குறார் தனியாக ராமனும்
திங்களும் முழிக்குது கங்குலும் முழிக்குது
தீரகோதண்ட ஸ்ரீராமரும் முழிக்கிறார்
மின்னலே வந்து ஓர் பெண்ணுருக் கொண்டதோ
கண்ணிலும் கருத்திலும் பெண்ணிவள் தோற்றமேன்
வண்ண ரதம்போல் இவள் வந்த சிங்காரமும்
புன்னகை கண்டு என் புத்தியை இழக்கவும்
என்ன நான் பெண்ணுக்கு இப்படித் தோற்றது
என்னாளும் நீதி முறை தவறாத என் மனம்
பெண்ணிவள் தன்னிடம் பிரியமும்கொண்டதால்
கன்னிகை தானென கர்க்கிசம் செய்வராம்
இன்னலிதமாகவே இரவெல்லாம் தூங்கலை
பாலாழி மீதிலே துயில்கின்ற பெருமான்
லீலாவிநோதமாய் புவிமீதில் வந்து
மாலாகித் தன்னருமை மணையாளை எண்ணி
மனசான கடல் துள்ளுமயக்கத்தில் நின்றார்.

விடிந்தது வானம் வெளுத்தனன் அருணன்
நெடுங்கதிர் விரித்து நிலமிசை வந்தான்
விடிந்தது என்றே தேவரெல்லாரும்
விஷ்ணுவை நோக்கி அர்க்கியமளித்தார்

விடிந்தது ராமா எழுந்திரு என்றே
வேதிய விச்வாமித்ரன் மொழிந்தான்
விடிந்தது அன்னை சீதையின் - நாதன்
வில்லை எடுத்தான் ஒடிந்தது அந்நாண்.
ஜனகமகாராஜன் வேள்வியைக் காண
கனகமணி மயமாய் மண்டபம் சென்று
முனிவரின் இருபுறமு மணிகள் இருவர் நின்று
முறுவல் புரியும வேளை ஜனகன் இவரைக்கண்டு
ஆரென்று கேட்டாரய்யா - ஜனகர்
ஆரென்று கேட்டாரய்யா
பாரெங்கும் தேடினாலும் கிடைக்காத அழகுடன்
பாலரிருவர் குணசீலர் இவர்களைத்தான்

கோசிகமாமுனி உரைப்பாராம் - ராமன்
குலமுறை தலைமுறை சொல்லுவாராம்

ரவிகுலம் தன்னில் வந்தவராம்
ராக்ஷஸருக்கு அந்தகராம்
புவிகள் செழிக்க வந்தவராம்
புஜபலந் தன்னில் நிறைந்தவராம்
பசியால் உயிர்கள் வருந்தாமல்
பாரை அம்பால் எய்தாராம்
பசியைப் போக்கி குடிகள் வாழப்
பலவிதச் சட்டம் செய்தவராம்
மனுவின் மரபில் வந்தவராம்
மாட்சிமை யெல்லாம் மிகுந்தவராம்
அலைவீசும் பாற்கடல் மேலே
அரிதுயில்கொண்ட பெருமானை
ஆறு இரண்டுக்கு நடுவினிலே - திரு
அரங்கம் தனிலே வழிபட்ட
இடச்வாகு குலம் வந்தவராம்
இரவி குல தசரத ராம் ராம்.

இந்திரன் ஒரு நாள் எருதானான்
ஏறி நடந்தான் காகுத்தன்
அசுரர் குலத்தைப் பூடாக்கி
அளித்தான் அரசை இந்திரற்கு



காகுத்தன் மரபில் வந்தவராம
காகுத்தப் பெயர் கொண்டவராம்

அடைக்கல மென்றே புறாவுக்கு
அறுத்துத் தந்தான் தொடை தனை
ஏரிக்குச் சரியது இல்லாமல்
தானே தட்டில் ஏறி நின்றான்
சிபியின் குலத்தில் வந்தவராம்
சீவனிடத்தன்பு உள்ளவராம்
குதிரை கெட்டது மல்லாமல்
குழியைத் தோண்டிய தென்பார்கள்
குதிரைக்காகத் தோண்டிய குழியே
குறைகடல் என்று அறியாயோ
சகரர் மரபில் வந்தவராம் - குண
சாகரமே உருவானவராம்
கங்கைக்காகத் தவம் செய்து
கால்கள் வெட்டிக் கொண்டுவந்து
பாரில் கழனி சிறக்கச் செய்த
பகீரதனும் இவர் மூதாதை
கங்கா நதியை தந்தவராம்
கருணா மூர்த்தி ராம் ராம்

கருவார் யாரும் இல்லாமல்
நாடெல்லாம் ஒரு குடை நிழலில்
லகுவாய் வென்று அரசாண்ட
ரகுவும் இவர்தம் மூதாதை
ரகுகுலந் தன்னில் வந்தவராம்
ராகவ நாமம் கொண்டவராம்
இந்துமதி என்னும் சுந்தரியாள்
எழில்மிகு பஜனை மாலையிட
வந்தவரெல்லாம் படையெடுத்தார் - நடு
வானில் அவர்களைத் தாக்கி வென்ற
அஜன் வமிசத்தில் வந்தவராம்
புஜபலம் ரொம்ப உள்ளவராம்
தசரதனை நீ யறியாயோ
தவத்தால் வந்த நால்வரிலே
புஜபலமிக்க ரகுராமர் - அவர்

பொலிவின் நிழலே லக்ஷ்மணன்
ராமன் புயவலி சொல்லிடவே
ராக்ஷசிப்போ இல்லையப்பா
காமனைப் போலவே அழகென்றால் - அது
காவிய லக்ஷண மாகாது.

(வேறு)

ஆழ்கடல் போல் நீல நிறமான ரகுராமன்
ஆவேசம் கொண்டு விட்டால் அலையுருவமாவான்
நெருங்கி வந்த தாடகைமேல் சரந்தொடுத்த காளில்
குலையுருவி மாலையிட வந்த நெஞ்சையுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவச் செய்தான்
இன்னமொரு அம்பாலே இரண்டு பேரை யெய்தான்
அண்ணன் அந்தச்சுபாகு போய் அமருலகம் சென்றான்
இன்னொருவன் போன இடம் இதுவரையும் காணோம்
என்ன வெனச் சொல்லிடுவேன் - இராமச்சந்திரன் பாணம்
பாதமலர் தூளியிலே கோதமனார் மனைவி
பாவையுருப் பெற்றுவிட்டாள் பாரறியுமிதனை
வேதமுறை வேள்வியதை நீ நடத்தல் சொன்னேன்
வேள்விகாண வந்தார்கள் வில்லையுமே பார்ப்பார்

பிள்ளை யிவனழகையும் வில்லையும் நினைந்து
பிரமிக்கிறார் வேதாந்தி ஜனகமகாராஜன்
முற்றும் துறந்த வோர் முனிவரானாலும்
பெற்ற பெண் கலியாணம் பேதலிக்க வைக்கும்
வில்லை யெடுத்தார்க்கே விவாகம் என்ற
சொல்லை யேன் சொன்னோ மென்றெண்ணினார் ஜனகர்
சீதையுட புண்ணியத்தால் சிலையை வளைத்திட்டால்
நாதனிவனாவான் அது நான் செய்த பாக்கியம்
கொண்டு வா வில்லென்று கொடுத்தாருத்தாரம்
முண்டர்கள் ஆயிரம் பேரங்கு சென்றார்
பூமி முதுகு நெளிக்கிறதாம் - அந்தப்
பொன்மலை மேரு நடுங்குறதாம்
ஆழி கலங்கி கொந்தளிக்குதாம் - வில்லை
அறுபதினாயிரம் பேர் நகட்ட



மேரு திரண்டு வடிவெடுத்தே - ஒரு
வில்லுருவாக இருக்கின்றதோ
பாலாழி அன்று கடைந்த மத்தோ - மழையில்
பார்த்திடும் வானவில் தானிதுவோ
வில்லை ஒடித்து வளைக்கிறதாம் பின்னே
சீதையின் கையைப் பிடிக்கிறதாம்
இல்லை யென்றே சொல்ல மாட்டாத ஒரு
இடையன் சிணையாட்டைக் காட்டினனாம்
மன்னன் ஜனகன் மதி கெட்டதோ - இந்த
மாதுக்கு விதியும் பகையாச்சோ
கன்னி சீதை வில்லைப் பார்த்திருந்தா - அப்பன்
கபடத்தைத் தானும் உணர்ந்திருப்பா.

கூட்டங் களிப்படிப் பேசையிலே - ஜனகன்
நாட்டம் விழுந்தது வில்மேலே
வாட்டமடைந்தது அவர் முகமும் - ஏன்
போட்டம் சபத மென்றெண்ணினார்

மங்கையிவள் அழகினிலே மையல்கொண்ட மன்னர்
இங்கு பல கோடி வந்தார் எனக்கு உனக்கு என்றார்
சங்கரனின் வில் வளைத்தால் பங்கமின்றித் தருவேன்
என்கவுமே வில்லைக் கண்டு இடுப்பு ஒடிந்துபோனார்
வில் வளைக்க ஆற்றாமல் விரகமும் தீராமல்
பல்வகைப் படைதிரட்டி படுகளத்தில் வந்தார்
சத்தியத்தின் பலத்தாலே வெற்றி கொண்டேனென்று
இத்தனை நாளாகுமட்டும் எவரும் வரவில்லை
அன்று முதல் இன்று வரை ஆருமிந்த வில்லருகில்
சென்றதில்லை மன்னர்களும் திரும்பி வந்ததில்லை
என்று மினிக்கலியாணம் இல்லை யென்றிருந்தோம்
இன்று வந்து சிங்கக்குட்டி வில்வளைத்தால் நன்று
எனத்தானே சனகருமே எடுத்துரைத்த போது
இளநகை யோடு வில்லை இராகவனும் பார்த்தார்
ஆகுதியில் நெய் பொழிய அனலெழுந்தாற் போலே
பாருவலி கொண்ட வீர ராகவன் எழுந்தார்

இந்த வில்லை எப்படித்தான் குழந்தை வளைப்பானோ
அந்த மிகும் சீதை கையை அவனும் பிடிப்பானோ

வில்லை வளைக்க முடியாட்டி இல்லை கலியாணம்
நல்லவளாம் சீதை வாழ்வில் எல்லைக் கட்டிப் போட்டார்
வள்ளலிவன் கையிலொரு மாலை தனைக் கொடுத்து
பிள்ளை சீதை கழுத்தில் போடச் சொல்லி யிருக்கோணும்
வெள்ளை மனச் சனகருக்குப் புத்தி எங்கே போச்சு
பின்னே முன்னே வில்லை வைத்துப் பேசுறாரே பேச்சு
தோகையர்கள் இப்படித்தான் துயருறும் வேளை
ஏகபரம்பொருள் ராமன் வில்லருகில் சென்றார்
மலைபோலே கிடந்த அந்த மகாதேவர் வில்லை
மாலையைப் போலெடுத்தாராம் மகாவிஷ்ணுராமர்
இமையாமல் கண் முழிச்சு எல்லாரும் பார்த்திருக்க
எவருமறியாமல் அவன் எப்படி வளைத்தானோ
இழுத்ததையும் வளைத்ததையும் காணநேரமில்லை
எடுத்தது கண்டார்கள் சிலை இற்றது கேட்டார்கள்
தட்டி விட்ட பாம்பு போலே தலையெடுத்த வில்லைத்
தொட்டிழுத்து நாணேற்றத் துரிசு செய்தபோது
பட்டெனவே வில்லொடிந்து பாதமதில் வீழ்ந்து
பரந்தாமா சரணமென்று பகருதந்த வில்லும்.

சீதை:
"காணவும் கிடைக்குதில்லையே - அந்த அழகு
கண்ணை விட்டுப் போகுதில்லையே
கடகமிட்ட கையைக் காண்பேனோ - அவர்
கைபிடித்த வில்லைக் காண்பேனோ
நடை நடந்த அழகைக் காண்பேனோ - நான்
நாணம் விட்டு உயிரும் வாழ்வேனோ
சந்த்ர பிம்ப முகத்தைப் பார்ப்பேனோ - தோளில்
தழுவிவந்த வில்லைப் பார்ப்பேனோ
விந்தையோடு கரியமாமுகில் - வான
வில்லுடன் குதித்து வந்ததோ
ஆவி குடிக்கும் மேக மென்பார்கள் - அதனை
அறிவை நானும் நம்பவில்லையே
பூவில் வந்த இந்த மேகமோ - கண்ணில்
புகுந்த எந்தன் ஆவி குடிக்குதே.
ஆசைப்பட்ட பெண் துடிக்கிறாள் - வந்து
அபய ஹஸ்தம் கொடுக்க வேண்டாமோ
காமன் வந்து அம்பை எய்யுறான் - அந்தப்



பூமன் வந்து தடுக்க வேண்டாமோ."
ஓடி வந்தாள் நீலமாலை - சீதாதேவியைத்
தேடி வந்தாள் நீலமாலை
ஆடி வந்தாள் பாட்டுப் பாடிவந்தாள் - ஒரு
கோடிக்குடம் மதுவைக் குடித்தவள் போல்

பாட்டுக்கும் கூத்துக்கும் காரணமென்ன
இவ்வேளையே - நீலமாலையே
நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை விளைந்தது
பாங்கியே - சுந்தராங்கியே
ஆனை சேனை பரிவாரம் கடல்போல
உள்ளவன் - மெத்த நல்லவன் - வித்தை வல்லவன்.

அஜமகாராசன் மைந்தன் தசரத
பாலனாம் - குணசீலனாம்
காதல் விளைத்திடும் காமனுக்கும் இவன்
காமனாம் - ரகுராமனாம்
சீதைக்கு ஏத்தவன் சிங்காரமானவன்
சுந்தரன் - ராமச்சந்திரன்
என்னடி தோழி நீ சொன்ன வயணங்கள்
புரியல்லே - ஒண்ணும் தெரியல்லே
இன்னமிருக்குது இடையில் மறிப்பது
சரியில்லே சொல்லத் தெரியல்லே
வில்லை வளைக்கவும் நாணேத்தவும் பக்கம்
மேவினான் மலர்தூவினார்
சொல்லி முடிக்கிற நேரத்திலே - வில்லைத்
தூக்கினான் நாணை ஊக்கினான்
என்னடி ஆச்சது விளையாட இதுநேரம்
அல்லடி இன்னும் சொல்லடி
கன்னி சீதைக்கிப்போ கலியாணம் வந்தது
நாணமேன் மகராணியே
நல்லதைச் செய்யுமுன் பிள்ளையார்க்குத் தேங்காய்
உடைக்கிறோம் பூசை முடிக்கிறோம்
வில்லும் ஒடிந்தது விக்கினம் தீர்ந்தது
வேகமே இனி விவாஹமே
வில்லொடிந்தாலென்ன கலியாணம் செய்பவள்
நாலடி அவனாரடி

நல்ல முனிவருடன் கூட வந்தவர்
தானம்மா - ஐயமேனம்மா.

முனிவர் பின்னே வந்த மணிகளென்னும்போது
மோகன ரூபனே என் றெண்ணுவாள்
இனியொருவன் அவ்வில்லை வளைத்திருந்தால் நானும்
எரியிலே மூழ்குவேனென்று சொல்வாள்
தனியிலே இதுவரை பட்டதுயர் பற்றாமல்
சந்தேகப் பேயதுவும் வந்து சூழ
கனிமொழிச் சீதையும் கலங்கினாள் தேறினாள்
கருத்திலுள்ள ராமனே என்றறிந்தாள்.

மத்தக மதக்களிறு கத்துகின்ற வாசல்
மன்னவனா ரயோத்தி தன்னகரைத் தேடி
கலியாண ஓலையுடனே காற்று வேகம்போலே
புலிபாயும் வேகத்திலே தூதர்கள் வந்தார்கள்
ஓலை கண்ட தசரதனார் உள்ளமது பொங்கி
பாலாழி பௌர்ணமியில் குதிப்பது போலாகி
பட்டோலை எழுத்து எல்லாம் படங்களாக ஆச்சாம்
பாராளும் ஸ்ரீராமர் போர் புரிகின்றாராம்
தாடகை விழுந்தாளாம் தவசி பணிந்தாராம்.
சனகனும் ராமருக்குத் தலைவணங்குறாராம்
யாருடைய பிள்ளையென ஊரெல்லாம் கேட்க
யாவரும் தசரதனின் அருமதலை யென்றார்
பிள்ளை யிவனாலே வந்த பெருமையிலே தந்தை
பித்தனாய் பைத்தியமாய் கத்தத் தங்கமாகி
தூதுவந்தப் பேருக்கெல்லாம் தோடாப் போடுறாராம்.
இனிமேலே நான் கிழவன் என்று சொல்லுவாராம்
ராமன் பாடு உங்கள் பாடு என்று சொல்லுவாராம்
ஆனையின் மேல் முரசடிச்சு ஊரழைக்கச் சொன்னார்
வானவர்கள் வாரும் என்று கொம்பு ஊதச் சொன்னார்
நாட்டு மக்கள் யாவரையும் கூட்டிக் கொண்டு தானே
நாடுவிட்டுப் போவதுபோல் நன்மிதிலைக்கேக



கோசலை சுமித்திரை கைகேயியுடன் கூட
கண்மணியாம் பரத சத்துருக்கினரும் கூட
கின்னரரும் கின்னரரும் ராமர் புகழ் பாட
மிதிலை நகர் சோலையிலே கூடாரம் போட
ஸ்ரீ ராமசந்திரரும் வந்து பணிந்தாராம்
சேர்த்திழுத்துக் கொண்டார் செல்வமகனைத் தந்தை
கோசிகரும் தசரதருக்காசி கூறினாராம்
குழந்தைகளை அவர் கையிலே பிடித்துக் கொடுத்தாராம்
ஜனகமகாராஜருமே தாம்பூலந் தந்தார்
ஜய் விஜயீ பவ வென்று ஜானவாசம் செய்தார்

மாப்பிள்ளை யழைக்கிறாராம் - மிதிலைநகர்
மணிமாட வீதி தன்னிலே -
தவமணிக் கோலம் தனை நீக்கி - ராமன்
நவமணிமாலை தனைப்பூண்டு
சக்ரவர்த்தித் திருமகனாகி ஒரு
சாரட்டு மீதிலே உட்கார
பட்டுப் பீதாம்பரம் கட்டிக்கிட்டார்
பரிமள கஸ்தூரி பொட்டுமிட்டார்
எட்டு திசையிலும் விட்டெறிக்கும் நல்ல
எழிலுடன் ராகவன் தேரேறி

மேளமும் தாளமும் சதுருடனே - மாட
வீதியில் ராமர் வரும்போது
தெரு நீளமாக மாதர் நிறைந்துவிட்டார்
நீ முந்தி நான் முந்தி என்றேதான்
மானொரு கூட்டம் வருகின்றதோ - புள்ளி
மயிலினம் ஆடித் திரிகின்றதோ
மானத்து மின்னல்கள் கூட்டங் கூட்டமாய்
வந்து நிறைந்ததோ வென்னும் படி
பள்ளத்திலே பாயும் தண்ணியைப் போல் - ராமர்
பாதாதி கேசத்தைப் பார்க்க வென்றே
தள்ளிப் புடிச்சு நெருக்கிக்கிட்டே - அந்தத்
தையலர் கூட்டம் வருகின்றதாம்
ஈடு இணையற்ற ராமன் அழகிலே
ஈடுபட்டே கண்கள் சொக்குறதாம்
தோளைக் கண்ட பெண்கள் தோளே கண்டார்

தாளைக் கண்ட மாதர் தாளே கண்டார்
ஆளை முழுவதும் கண்டவரில்லை அவர்
அங்க லட்சணத்தில் மெய்மறந்தார்
"சீதைக்கு வாய்த்திட்ட யோகமடி - நாமும்
சென்ம மெடுத்துப் பல னென்னடி
நாதன் கிடைக்கோணும் இதைப்போல - அடி
நமக்கு வாய்த்ததைப் பாருங்கடி
தாளமும் மேளமும் கேட்டபடி - அங்கு
சதுருக் கச்சேரி பார்ப்பமடி
நாளை முதல் ஒரு மாதம் நம் வீட்டிலே
ஆளை வடிக்கும் சமயலில்லே"
என்றந்த மாதர்கள் எல்லாரும்
சென்றாராம் கல்யாண மண்டபத்தில்
குன்றின் மேலிட்ட மணிவிளக்காய் - ரகு
குலத்து நாயகன் உட்கார்ந்தான்.

## சீதாதேவி வருதல்

மெல்லிய பாதம்வலிக்கு மென்று - தளிர்
மெத்தை தரையில் விரித்ததுபோல்
ஜில்லு ஜில்லென்று நிழல் பரப்ப - அந்த
சீதை யம்மன் நடந்து வந்தாள்
பட்டு மேற்கட்டிப் பிடித்து வர - சீதை
மெட்டி குலுங்க நடை நடக்க
பாற்கடலில் லக்ஷ்மி வந்த பாவனையைப் போலே
நாற்புறமும் ஜனக்கடலில் நடந்து வந்தாள் சீதை
பாதச்சிலம்பு விளக்கொளி போல்
படர்ந்து சோதிகள் மின்னிவர
சீதைக்குத் தாயாம் பூமாதேவி தந்த
சீருவரிசை போல் நிலஞ்சிவக்க
பச்சை மலைபோலழகன் பக்கத்திலே சீதா
லட்சுமி வந்துட்காரக் கிடைத்துவிடும் என்றால்



இச்சிலையை மட்டுமென இமயமலை தனையும்
அச்சணமே வளைச்சிருப்பான் அந்த ராமச்சந்திரன்.

இப்படிக் கோசிகர் தான் நினைக்க
எந்தை வசிட்டர் நினைத்ததென்ன
இருபத்திரெண்டு தலைமுறையாக நான்
ஏந்தின தர்ப்பை கணக்கு இல்லை
புரோகிதம் பார்த்த பலனை யெல்லாம் - இந்தப்
பிள்ளைப் பிறந்ததும் நானடைந்தேன்
தவசி உருவத்தை விட்டுவிட்டு நானும்
தசரதன் வீட்டுக்கு வந்ததென்ன
தண்டுகமண்டலம் விட்டுவிட்டு நானும்
தண்டுலம் வாங்கிப் பிழைப்பதென்ன
பண்டு ரவிகுல வம்சத்திலே - அந்தப்
பாற்கடல் நாயகன் அவதாரம் எனக்
கண்டு வந்தேன் இன்று கண்டுக்கொண்டேன் - அந்தக்
கமலையும் வந்திப்போ மாலையிட்டாள்
குலகுரு சிந்தையும் இவ்வண்ணமாம் - அந்தக்
கோதண்ட ராமரைப். பெற்றவரோ
ஏழு உலகமும் ஓர் குடையின் நிழல்
இருந்து நாளரசாண்டாலும்
வாழும் மஹாலக்ஷ்மி எந்தன் மனை தேடி
வந்த நாளின்னாளே என்றாராம்.
கூடியிருந்த சனங்களெல்லாம் - மனம்
கொண்ட எண்ணம் என்ன வென்றாலோ
தேடக் கிடையாத தெய்வ மிங்கே வந்து
சீதையும் ராமனு மாச்சு தென்றே
கையைச் சிரசுக்கு மேலுயர்த்தி - இரு
கண்களில் ஆனந்த பாஷ்பமுடின்
அய்யனும் அன்னையும் இருந்த இடம் நோக்கி
ஆதாரம் நீயென்று தோத்தரித்தார்
தந்தை சனகருகினிலே - தங்கத்
தவிசிட்டுச் சீதையை அமரவைத்தார்
அங்கை வளையத் திருத்திய பாவனை
அய்யன் முகத்தை யவள் பார்க்க
பாற் கடலில் வந்த அமிர்த மெல்லாம் - அந்தப்
பாவையே வாரிக்குடித்தது போல்

பாற் கடல் நாயகன் அழகையெல்லாம் - அவள்
பருகி உடம்பு பருத்துவிட்டாள்.
என்னென்ன புண்ணியம் செய்தாரோ ஜனகர்
எத்தனைப் பிறப்பிலே செய்தவமோ
அன்னை சீதையை கன்னியாதானமாய்
ஆதிப் பரம்பொருட் கீவதென்றால்.

என்னருமை மகள் சீதை தன்னை - இராமா
ஏற்றுக் கொள்வீர் எனக் கை கொடுத்தார்
உன்னுடைய தர்மம் யாவையிலும் - அவள்
உடனிருந்தே அதைச் செய்திடுவாள்
மன்னவனே எனக் கன்னிகா தானமாய்
மாலுக்குத் தாரையும் வார்த்திடவே
பொன்மழை பூமழை நன்மொழி ஆசிகள்
போற்றியும் நாறறிசையோரும் செய்தார்

ஸ்ரீராமச்சந்திரன் தாள் போற்றி - அந்தச்
சீதை மணவாளன் தாள் போற்றி
பாரான வந்தவன் தாள் போற்றி - அதைப்
பாடிய கம்பனின் தாள் போற்றி.

☆ ☆ ☆







அமரர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் சாதாரண வருஷத்தில் (1910-நவம்பர்) பிறந்த ஓர் அசாதாரண மனிதர்.

பிறந்த ஊர் திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) அருகே உள்ள கன்னாரியேந்தல் என்ற சிறு கிராமம். தாயார் கங்கம்மாள். தந்தை மகாலிங்க ஐயர். இளவயதிலேயே தாயை இழந்து சிற்றன்னை கிட்டம்மாள் என்ற மாதரசியின் அன்பில் திளைத்து வளர்ந்தவர்.

படித்தது எட்டாவது வகுப்பு வரை. ஆனால் அவர் படிக்காதது ஏதுமில்லை என்று சொல்லுமளவிற்குப் படித்துத் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

செட்டி நாட்டுப் பகுதியில் கணக்குப் பிள்ளையாக வாழ்ந்தாலும் நாடகம், இசை இவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

பின்னர் உயர்திரு எஸ். எஸ். வாசனின் ஜெமினியில் சேர்ந்து ஜெமினி படங்கள் அனைத்திலும் பணி புரிந்தார். மிஸ் மாலினி, வள்ளியின் செல்வன், ஔவையார் ஆகிய படங்களை இயக்கினார்.

நாட்டுப் பாடல் எழுதுவதில் தனக்கென்று தனி இடத்தை அமைத்துக் கொண்டார். காந்தி மகான் கதை, பாரதி கதை, கம்பராமாயணச் சிந்து போன்ற வில்லிசை நிகழ்ச்சிகள் மூலம் மேலும் புகழெய்தினார்.

இவர் எழுதிய பல படைப்புகளில் தில்லானா மோகனாம்பாள், கட்டபொம்மன் கதை ஆகியன மிகப் புகழ் பெற்றது.

பத்மஸ்ரீ, கலைமாமணி முதலான விருதுகள் பெற்றவர். 1974 பிப்ரவரி 15ஆம் தேதி மறைந்தார். இந்த ஆண்டை அமரர் கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் நூற்றாண்டாகக் கொண்டாடி மகிழ்வோம்!



**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை